ஞானசம்பந்தம்

மலர் 12] விஜய௵ வைகாசி௴ 10—6—53 [இதழ் 7

11-6.

தருமபுர ஆதீனம்

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு 5-ம் திருநாள்



சென்னை ராஜ்ய அறநிலைய மந்திரி

கனம் திரு. K. வேங்கடசாமி நாயுடு அவர்கள் B, A., B. L.

தலைமையுரை நிகழ்த்துகிறார்கள்.

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.

வேளூரில் வஸந்தோற்சவம்

தருமபுர ஆதினத்துக்குச் சொந்தமான வேளூர் (வைத்தீஸ்வரன்கோயில்) தேவஸ்தானத்தில் வஸந்தோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 23—5—53 சனிக்கிழமை மாலை மாயூரம் கூறைநாடு ஸ்ரீமதி S. S. வடிவாம்பாள் & பார்ட்டியின் இன்னிசையும், 26—5—53 செவ்வாய்க்கிழமை மாலை கீரனூர் திரு. K. C. குருராமலிங்கம் & பார்ட்டியின் இன்னிசையும் நடைபெற்றன. அன்று மாலை மணி 6க்குமேல் தருமபுர ஆதீன வித்துவான் கீர்த்தனகுலசேகரபாகவதர் பிர்மஸ்ரீ S. விஜயராகவாசாரியார் அவர்கள் & பார்ட்டியார் திருநீலகண்டர் கதாகாலக்ஷேபம் நிகழ்த்தினார்கள். அன்பர்கள் பலர் வந்து கேட்டு இன்புற்றனர்.

தஞ்சைமாவட்ட

அருள்நெறித் திருக்கூட்ட மாநாடு

பாபநாசம் தாலூகா ஒன்பத்துவேலி கிராமத்தில் 15—5—53 அன்று தஞ்சைமாவட்ட அருள்நெறித் திருக்கூட்ட மாநாடு நடைபெற்றது. மாநாட்டுக்குக் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தலைமைதாங்கினார்கள். பாபநாசம் தாலூகா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. டி. வி. சேஷையர் அவர்கள் மாநாட்டுப்பந்தலின் முன்புறம் அருள்நெறித் திருக்கூட்டக் கொடியை ஏற்றிவைத்தார்.

தருமபுர ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அனுப்பிய ஆசியுரையைத் திருவையாறு தேவஸ்தானம் கட்டளைவிசாரணை வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வழங்கி மாநாட்டைத் திறந்துவைத்தார்கள். கும்பகோணம் நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. எஸ். சுந்தரேசன் செட்டியார் அவர்கள் "சமயத் தொண்டு" என்ற பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

திருவாசக விழா :— மாநாட்டையொட்டிப் பிற்பகலில் திருவாசக பாராயணத்துடன் விழா தொடங்கியது. திரு. உலகவூழியனார் அவர்கள் திருவாசகம்பற்றிப் பேசினார்.

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு 8-ம் திருநாள்:



மயிலம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞான பாலைய தேசிக சுவாமிகள் அவர்கள் தலைமையில், மதுரை, திரு. சுந்தரஞ் செட்டியார் அவர்கள் பேசுகிறார்கள்.

தருமபுர ஆதீனத் தேவாரபாடசாலை முகப்பில்:

மயிலம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞான பாலைய தேசிக சுவாமிகளை
மாநாட்டிற்கு அழைத்து வருதல்.

312

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 12] விஜயஞு வைகாசிமீ 10—6—53. [இதழ் 7

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

தமிழ் இனிமைதான். இனிமைக்கு இனிமை ஊட்டுவது தெய்வத்தன்மை. தெய்வமணங்கமழாத தமிழ் இல்லை என்றே சொல்லலாம். தெய்வத்தமிழின் முடிந்தபயன், திருநெறியிற் சேர்ப்பித்தல். சிவமணம் மாருத தெய்வப்பால் வழியும் திருவாயால் திருஞானசம்பந்தப்பெருமான் "திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே" என்று சொல்லி யருளினுர். அருளாளர்களின் வாயிலமைந்த சொற்கூட்டங்கள் இயற்கையே பெருமை வாய்ந்தன. அவை ஒளிவயிரம்போல் வன. அத்தகையசொற்கிடக்கையைத்திருப்பெயராகக்கொண்டு வளர்ந்த இம்மாநாடு இன்றுவரை நல்ல பயனளித்து வந்திருக் கிறது. சென்னை முதலிய இடங்களிலும் சென்று தெய்வத் தமிழைப் பரப்பிவந்திருக்கிறது. இவ்வாண்டு மாநாடு அமைப்பு முறையில் ஒரு தனியழகு. குமரகுருபரசுவாமிகள் 'ஒரும் வேதாந்தத்துச்சியிற் பழுத்த ஆரா இன்ப அருங்கனி பிழிந்து சாரங்கொண்ட சைவசித்தாந்தம்' எனச் சைவசித்தாந்தத்தின் தனிப்பெருமையை எடுத்து விளக்கினுர்கள். அதனை இன்று

எடுத்துக்காட்டவே எல்லாமத தத்துவ ஆராய்ச்சியோடு இறுதியில் சைவசித்தாந்தத்தை முடிபாகக்கொண்டு இலங்குவ தாயிற்று. பவனிவரும் மன்னனுக்கு யானை தானை முதலிய எல்லாம் உறுதுணையாயிருப்பினும் கோட்டைவாயிலில் நிற்பன நிற்க, கோபுரவாயிலில் நிற்பன நிற்க, தோரணவாயி லில் நிற்பன நிற்க, அரண்மனைவாயிலில் நிற்பன நிற்க, ஆஸ் தான வாயிலில் நிற்பன நிற்க, அந்தப்புர வாயிலில் நிற்பன் நிற்க, அணுக்கன் வாயிலில் நிற்பன நிற்க அரசிமட்டும் உடனுறைவதுபோல அந்த அந்த தத்துவங்களும் அந்த அந்த எல்லையில் அமைந்துநிற்பதை, இம்மாநாட்டு நிகழ்ச்சி எல்லாரும் அறிய எடுத்துக்காட்டியது.

அன்றியும் ஆற்றிலும் குளங்களிலும் குட்டைகளிலும் சிறுநீர்த்தேக்கத்திலும் கிணற்றிலும் செம்புத்தண்ணீரிலும் காணப்படும் சூரியன் ஒன்றுதல்போல, எல்லாச் சமயத் தத்துவங்களிலும் ஒரே கருத்து ஊடுருவி நிற்பதை உணரும் வாய்ப்பு கிட்டியது. "யாதொரு தெய்வம் கொண்டீர் அத் தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்" என்பதற்கு எல்லாத் தெய்வங்களிலும் அந்தர்யாமியாயிருந்து அந்தந்த தெய்வங்களின் எல்லைக்குட்பட்டு அதிகாரம் புரியும் வண்ணம் நிற்பவன் இறைவனே என்பதைச் சிவஞான சித்தியார் தெரிவித்ததுபோல, எல்லாமத தத்துவ சாஸ்திரங் களிலும் உயிர்க்குயிராயிருந்தும் அமைதியை அளிப்பது சுத்தாத்துவிதநிலையே என்பது விளக்கப்பட்டது. மாநாட்டில் கலந்துகொண்ட அறிஞர்கள் அனைவரும் தத்தம் மதக் கருத் துக்களோடு சைவசித்தாந்தக் கருத்துக்கள் ஒத்திருத்தலை எடுத்துக் காட்டினர். கிறிஸ்தவப் பேச்சாளரும் நம் முடைய பெரியபுராணத்துக்கும் அவர்களுடைய வரலாற் றுக்கும் உள்ள பல ஒற்றுமைகளை எடுத்துக்காட்டிப்பேசினர். கரும்பு, வெல்லக்கட்டி, கற்கண்டு, தேவாமுதம் இவற்றை ஒன்றன்பின் ஒன்றாகச் சுவைத்த மக்கள் அவ்வவற்றின் தகுதி யறிந்து சுவைப்பார்களே அன்றிக் கரும்பையே விரும்பிக் கோதையும் சக்கையையும் பொருளாகக் கொள்ளார்கள். வெல்லக்கட்டியைச் சுவைத்தமக்கள் அதனோடு கலந்துண்ட

3314

தூசுதுப்புக்களையும் பொருளெனக் கொள்ளமாட்டார்கள். அதுபோல் சமயநிலைத் தேனமுது அருந்தியவர்களும், எல்லாச் சமயங்களையும் ஒப்பக்கொண்டு அவற்றின் உச்சியில் விளங்கும் சைவசித்தாந்தத்தின் முடிந்தபயன் சிவஞானமே என்பதை உணராமலிருக்கமாட்டார்கள். அதனை இம்மாநாடு எடுத்து விளக்கியது. 'விரிந்த மனப்பான்மையோடு தம் குறிக்கோளை விட்டுக்கொடுக்காமல் இம் மாநாட்டைக் கூட்டுவித்த **ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம்** அவர்களின் திருவுள்ளம் மிகமிகப் போற்றற்குரியது' என்று மயிலம் பொம்மைய பாளையம் பெரியமடம் **ஸ்ரீலஸ்ரீ மடாதிபதி** அவர்களும் மந்திரி கனம் **ஸ்ரீ கே. வேங்கடசாமி நாயுடு** அவர்களும், **ஸ்ரீ எம். பக்தவத்ஸலம்** அவர்களும், **ஸ்ரீ இராமசாமிக் கவுண்டர்** அவர்களும் பாராட்டிய பொன்னுரைகளை எடுத்துக்காட்டுகிறோம். தீயென்றால் வாய் வேகாதவாறுபோல, பிறமதக்கருத்துக்களை ஒருவன் உணர்ந்துகொள்வதால் மனம் மாறாது. உண்மையறிந்து உறுதிப்படுமென்றே உரைக்கிறோம்.

இக்காலநிலையில் கடவுள் ஒருவர் உண்டு என்ற கொள்கை உடையார் அனைவரும் ஒன்றுசேர்ந்து தத்தம் எல்லையில் இருந்து உழைத்தால் அல்லது, எதிர்ப்புச் சக்திகளால் சமய நிலை குன்றிவிடும் என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். அதற்காகவே இம்மாநாட்டைக்கூட்டுவித்து, கடவுள் உண்டென்ற கொள்கையில் நாமெல்லோரும் ஒன்றுபட்டவர்கள்; அடையும் நெறியில்மட்டும் அவர் அவர் அனுபவம் அவரவர் பரிபாகத்துக்கேற்ப அமைவதாகும் என்று ஆசி வழங்கிய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் பொன்னுரை ஊன்றி அனுபவித்தற்குரியதாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

315

குருபூஜை விழாவில்

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருக்கோலக்காட்சியருளியபோது

சமர்ப்பித்த வாழ்த்து

(திரு. E. S. வரதராஜ அய்யர் அவர்கள், அண்ணாமலைநகர்.)

மெய்யணி நீறும் உமையொரு பாகன் விழிமணியும்
துய்யகல் லாடையும் குண்டலந் தூங்குந் துணைச்செவியும்
செய்யன் கரிய மிடற்றன் பதமலர் சேருளமும்
ஐயன் தருமைநல் ஆதீனம் காக்கும் அருட்டகைக்கே. 1

விண்ணார் கயிலை மரபினை யைந்தென மேவுமுயர்
எண்ணார் தருமெழிற் பட்டத் தமர்ந்தனை யின்தமிழும்
பண்ணார் கலைகளும் பல்கத் தருமைப் பருநகராள்
அண்ண லுயர்சுப் பிரமணி யப்பெயர் ஆண்டகையே. 2

வற்றாத சைவத் திருவும் பெருகி வளர்நிதியும்
கற்றாரைப் போற்றும் கருத்தும் நிறைந்தொளிர் கண்ணியனே
பொற்றாரு வென்ன வுயர்சைவ மோங்கப் பொழிதருமை
மற்றார் நிகருனக் கண்ணல் தருமை வளர்வள்ளலே. 3

தன்னே ரிலாதநற் சைவம் தழைக்கத் தமிழ்வளரப்
பொன்னாரு மேனியும் கற்றைச் சடையும் புரமெரித்தோன்
மின்னார் விழிமணி யுந்திரு நீறும் விளங்கவொளிர்
தென்னார் தருமை நகர்சுப் பிரமணித் தேசிகனே. 4

ஐயா வருக வெழிற்சைவ அண்ணல் வருக வருந்தமிழும்
அருமைச் சைவப் பெரும்பயிரும் அறமும் பெருக
வருகவெழில்
மையார் கண்டன் மலர்ப்பதங்கள் மணங்கொள் பெரும
வருகவுயர்
மாண்பார் சைவ மடங்கள்பல மரபின் ஆளும் இறைவருக
மெய்யார்நீறும்விழிமணியும்விளங்குங்கற்றைவியன்சடையும்
மிளிர வருக வடியர்களி மேவவருக அறம் வளர்க்கும்
கையாய் சுப்ர மணிப்பெயர்கொள் தருமைக் கரசே வருகவே
கவினார் மறைகட் கமைந்தகலை கண்ணே வருக வருகவே.

மூவர்தே வார முறையும்பே ராகமமும்
சேவல்லான் சைவச் செழுந்திருவும்—காவல்
புரிவான் தருமையெனும் பொன்னர்க்க ணூற்ற
தருவேநீ வாழ்க தழைத்து. 6

குருபூஜைத் திருநாளன்று:



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருக்கொலுக்காட்சி வழங்குதல்.

316

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள்

தருமபுர ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி மகோற்சவம் ஐந்தாவது திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு தொடக்க விழாவில், விழாத் தலைமை தாங்கிய திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் இளவரசு, வித்துவான்,

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகளவர்களுக்கு

வழங்கிய ஆசியுரை

25—5—53.

திருஞானசம்பந்தர் முதலிய சிவஞானச்செல்வர்களால் அருளிச்செய்யப்பெற்றன திருமுறைகள். அவைகளே ஆண்டவன் அருள்நெறியில் நம்மையெல்லாம் அழைத்துச்செல்வன ; உலகியல்நிலையினையும் கடவுள் நெறியினையும் ஒற்றுமைப் படுத்தி உண்மை இன்பத்தினை உணர்விப்பன; உவமையிலாக் கலைஞானத்தையும் உணர்வரிய மெய்ஞ்ஞானத்தையும் உவந்து நல்குவன ; கருமுறை கழித்துப் பெருமுறை பெறுவிப்பன ; நிலையிலா இன்பம் நீக்கி நிலையுள்ள பேரின்பம் பெறச்செய்வன ; அவநிலைநீக்கித் தவநிலைதந்தருள்வன.

இத்தகைய இணையிலாப் பெருமைவாய்ந்த திருமுறைகளின் கருத்துக்களைப் பிரபந்த வாயிலாக உலகினர்க்கு உபகரித்தவர் நமது ஸ்ரீ குமரகுருபர முனிவர். இருநூற்றறுபத்தைந்து ஆண்டுகட்கு முன் விளங்கிய நமதுகுருமூர்த்திகளாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களிடம் அருளுபதேசம் பெற்றுத் தவஞானச்செல்வராகத் திகழ்ந்தவர். திருநெறிய தெய்வத் தமிழின் தீஞ்சுவையினைக் குமரி முதல் காசிவரை - ஏன்? இமயம் வரையிலுங்கூட அன்பர்கள் சுவைக்குமாறு அரும்பணியாற்றியவர். அவ்வருளாளரின் வழியினைப் பின்பற்றியே நமது கண்மணியிற்சிறந்த நன்மணியாகிய ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருமுறைகள், சிவபுராணங்கள், ஏனைய அருள்நூல்கள் ஆகியவைகளை

வெளியிட்டு வழங்கியும், சுமார் இருபத்திரண்டுலக்ஷம் ரூபாய்க்கு நிரந்தரப் பரிசுத் திட்டங்கள் பல அமைத்தும் அறநெறி வளர்த்துவரும் ஆற்றலைக்கண்டு அகமிக மகிழ்கின்றோம்.

அவர்கள் அறக்கட்டளைகளைப் பெறாத மொழிக் கழகங்களோ! அறச்சாலைகளோ! பள்ளிகளோ! ஆலயங்களோ! நகரமன்றங்களோ! மருத்துவ இல்லங்களோ! இல்லை எனலாம். மேலும்மேலும் இவ்வகையான அறக்கட்டளை பல்கி நாடு உயர்வதாக. தெய்வத்தமிழ்ப் பாடல்கள், படிப்பவர்கள் சிந்தையிற்பதியச் சிலையில் எழுத்தாகத் திருக்கோயில்களில் செதுக்கி வைக்கப்பெற்றுள்ளன. அது இறைவனுடைய உருவத் திருமேனியோடு அறிவுருவத் திருமேனியையும் கண்டு உலகம் உய்திபெறச்செய்யும் உபகாரமாகும்.

அத்தகைய நல்லறங்கட்கு அவர்கள் பிற்றோன்றலாகத் தாம் அமர்ந்து பணிபுரிந்து வருவது அளவிலாமகிழ்ச்சியை அளிக்கின்றது. வருங்காலத் தமிழகத்தில் இளைஞர்களின் உள்ளத்தைப் பண்படுத்தி, அவர்கள் சிவஞானம் பருகுவதற்குத் தமதுதொண்டு பயன்படுவதாக. அதற்குச் சான்றாக நமது ஆதீனத்தில், உலகம் அகச்சமய புறச்சமயங்களின் தத்துவ அடிப்படைகளை உள்ளவாறு உணர்ந்து உண்மை கண்டு சித்தாந்தத்தேனமுது அருந்தத் துணையாகும் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டினை இன்று தொடங்கிவைத்துத் தெளிவுரை நல்குக. நமது குருமூர்த்திகள் வகுத்துச்சென்ற அருள்வழி நின்று மருள்வழி மாற்றிச் செந்தமிழ்ச்சொக்கன் திருவருள் பெறுக.

வாழ்க நின் உள்ளம். வாழ்க நின் மணிநா.
வாழ்க நம் சைவம். வாழ்க நந் தமிழ்மொழி.

318

வரவேற்பு நன்மலர்

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு மூன்ருந்திருநாள் (27—5—53) புதன்கிழமையன்று தலைமை வகித்துச் சிறப்பித்த சென்னை முன்னையமைச்சர், உயர்திருவாளர்.

M. பக்தவத்ஸலம் B. A., B. L., அவர்களுக்கு

அளித்தது.

திருமலி குன்றச் சேக்கிழார் மரபில்
வருமகிழ் பக்த வத்ஸல! வருக;
முத்து ரங்க முதலோன் வழியே
நத்தும் பெருமை நண்ணியோய்! வருக;
ஆங்கிலம் தமிழில் ஓங்கிய பல்புகழ்
தாங்கிய செம்மையின் தக்கோய்! வருக;
அமிழ்தினும் இனிய தமிழ்மொழி யதனில்
சொற்பெருக் காற்றுந் தூயோய்! வருக;
கேட்டார்ப் பிணிக்குந் தகைமையின் கேளார்
வேட்ப மொழியும் விழுமியோய்! வருக;
தியாகக் குன்றின் சிகரத் துயர்ந்து
யோகத் தோங்கிய உத்தமக் காந்தியின்
அடிவழிப் பணிபுரி ஆற்றலோய்! வருக;
நன்னீர் பெற்றுத் தென்ன டுய்ய
அணைபல புரிந்த அரசன் வளவனின்
பலவணை தோற்றி நிலவளஞ் செய்தோய்!
ஆற்றலும் ஒளியும் ஆங்காங் குயரத்
தோற்றத் துணைசெய் தோன்ருல்! வருக;
பொருளா தாரம் பொங்கித் தழைக்கவும்
போக்கு வரவு தேக்கமின் றியலவும்
பலர்புகழ் புகலூர்ப் பாலம் முதல்பல
நிலவுற இயற்றிய நிபுண! வருக;
உயிர்த்துணை யாகிய செயிரறு தெய்வங்
கொள்கையிற் றிளைக்குநற் குணத்தோய்! வருக;
கல்விப் பணியும் கடவுட் பணியும்

நல்வித் தகத்தொடு நாளும் புரியுந்
தருமையம் பதியில் சமயக் கணக்கர்தம்
அருமைப் புலச்செறி வாய்மா நாட்டில்
துவைதக் கொள்கையைத் துலக்குநன் ஞானின்
அவையின் தலைமையை ஆற்ற வருக.
சமயங் கட்கெல்லாந் தாயக மாகிய
சைவசித் தாந்தத் தனிப்பெரு முதல்வன்
செந்தமிழ்ச் சொக்கன் திருவரு ளாலே
நந்தமி ழகத்தின் நல்லுயர் பதவியும்
ஏனைய நலன்களும் இனிதின் மேவி
ஆனையைக் காத்த அண்ணல் போல
வாழ்கநீ டூழி வாழ்க
வாழ்க மகிழ்ச்சியும் மாட்சியும் நிறைந்தே.

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,

"ஞானசம்பந்தம்" காரியாலயம்,

தருமபுரம், மாயூரம் P. O.

320

வரவேற்பு நன்மலர்

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு (29—5—53)
வெள்ளிக்கிழமை ஐந்தாந்திருநாள் விழாத் தலைவர்,
சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்பு மந்திரி
கனம். உயர்திருவாளர்.

K. வேங்கடசாமிநாயுடு B. A., B. L., அவர்கட்கு

அளித்தது.

கல்வி கேள்வியிற் சிறந்தோய்! வருக.

உலகில் மக்கள் பெரியவர்களாக இரண்டே வழிகளைக் கண்டனர் அறிஞர். ஒன்று கல்வி; மற்ருென்று கேள்வி. கல்வி தன் அறிவை விளக்குவது; ஒளியுள்ள மணியைச் சாணைபிடிப்பதுபோல. கேள்வி பிறரறிவைக் கொண்டு தன்னறிவைத் தூய்மைப்படுத்தி வளர்ப்பது; அந்த மணிக்கு மெருகேற்றுவதுபோல. இந்த இரண்டாலும் மனிதன் அறிவு உரம் பெற்றுப் பெரியவனுகிருன். கேள்வியால் பிறரை மதித்து நடக்கும் பெருங்குணம் வளர்கிறது. இந்த இரு குணமும் ஒருங்கமைந்த உயரியோய்! தாங்கள் பட்டப் பரீட்சைகளிலும் சட்டத்தேர்வுகளிலும்சிறந்து அம்மட்டோடு அமையாது, சிறந்த கேள்விஞானம் உடையவர்களாகவும் விளங்குகிறீர்கள். அவ்வருமைக்கு மிகமிகப்பாராட்டுகிருேம்.

"கற்றல் கேட்டல் உடையார் பெரியார்" —சம்பந்தர்.

ஆன்றவிந்தடங்கிய சான்ருேய்! வருக.

மனிதன் நிலை உயர மனம் உயர்கிறது. மனம் உயரப் பணிவு உண்டாகிறது. ஏன்? பணியே அணியாய் அமைகிறது என்பதற்குத் தாங்களே இலக்கியம் ஆகிறீர்கள். தாங்கள் பிறவிச்செல்வராக இருந்தும் - எல்லா நலங்களும் ஒருசேரப் பெற்றிருந்தும் - பணிவின் சிகரமாக அணிசெய்வதை அறியாதார் யார்? அதனுலேயே உலகம் உங்களைப் போற்றுகிறது. பதவி தங்களைக்கொண்டு பதம் பெறுகிறது.

"எல்லார்க்கும் நன்றும் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. —வள்ளுவர்.

கடமை அறிந்தாற்றும் கர்மவீர !

காந்தி அடிகள் ஒரு கர்மவீரர். கண்ணன் கர்மயோகத்தின் உபதேசஞானகுரு. தாங்கள் இவ்விருவர் காட்டிய நெறியிலும் நின்று, செயலாற்றும் செம்மல். யாரும் எதையும் பேசலாம்; செய்வது எளிதன்று. ஆயினும் தாங்கள் தெய்வ நிலையங்களைப்பற்றி நெடுங்காலம் சிந்தித்த சிந்தனைகளைச் செயல்முறையிற் காட்ட அமைச்சுரிமை ஏற்று, ஆவனபுரிகின்றீர்கள்; பண்டும், அமைச்சராய் இருந்தமையாலேயே அருள்மொழித்தேவரான சேக்கிழார் அநபாயன் அரசியலை ஒழுங்குபடுத்தினர், தெய்வக்காவியம் செய்தார். திருவாதவூரர் அரிமர்த்தனனுக்கு ஞானகுருவும் ஆனர்; திருவாசகத்தையும் செய்தார். அதுபோல எதிர்கால வாழ்விற்கு ஏற்றவற்றைத் தாங்களும் இயற்றுவீர்கள் என்று எண்ணுகிறேம்.

"செயற்கரிய செய்வார் பெரியர்" —வள்ளுவர்.

பொதுப்பணி புரியும் புனித ! வருக !

பணி ஊதியத்தையும் உழைப்பையும் ஒத்து மதிக்கப்படுவதன்று. மக்களுடைய பண்பாடே பணியின்பயன். காந்தி அடிகளும் தம்பணியின் தகுதியை நம்முடைய ஒற்றுமையிலும் தியாகத்திலும் வைத்தே நிறுத்துப்பார்த்துக் கொண்டார். சுருங்கச் சொன்னல், பணி தன்னலத்தியாகத்திலும் பிறர்நலம்பேணும் பெருமையிலுமே அமைந்திருக்கிறது. அதனை எண்ணியே தாங்கள் சென்னை மேயராக - திருப்பதி தேவஸ்தான கமிட்டித் தலைவராக - பல்கலைவளர் கழகங்களின் செயலுறுப்பினராக - நீண்டநாள் காங்கிரஸ் உழைப்பாளராக இருந்து வருகிறீர்கள். அதனலேயே மந்திரி பதவி தாங்களைத் தேடிவந்தது. அதிலும் தெய்வநிலைய மந்திரியாகத் திகழச்செய்தது.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே" —அப்பர்.

கடவுள் அடிபேணும் கண்ணிய! வருக!

படிப்பெல்லாம் துடிப்படக்க. நிறைகுடம் நீர் தளும்பாத வாறுபோல மிகப்படித்தவர்கள் மிகப்பணிந்தவர்கள்; என்பது வாய்பேசாது செயல் ஒடுங்கி இருத்தலல்ல; மனம் படிய வேண்டிய இடத்துப் படிதல். அவ்விடம் எது? ஆண்டவன் திருவடி. இதனை உறுதியாக எண்ணித் தாங்கள் திருவேங்கட முடையான் திருவடியிற்பதித்த சிந்தையுடன் இருப்பது உங்களுடைய தகுதிக்கு ஒரு தனியொளியை உண்டாக்கி வருகிறது.

"கற்றதனலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅரெனின்" —வள்ளுவர்.

தெய்வத் திருநெறிச் சீர்சால் அமைச்ச!

தங்கள் படிப்பும் பண்பாடும் எந்தத்துறையிலும் அமைச்சராதற்கு ஏற்றதாயினும், தெய்வத்துறையில் தங்கள் சிந்தனை தோய்ந்ததற்கு - தொண்டாற்ற முன்வந்ததற்கு ஒரு காரணம் இல்லாமல் இல்லை. தாங்கள் பல நாட்களாகத் திருவேங்கடநாதன் திருக்கோயில் பராமரிப்பிலே சேவை செய்த கருத்து வளர்ச்சியால், திருக்கோயில்களெங்குமே அறிவுக்கருவூலங்களாக - சமயதத்துவங்களைப் பயிற்றுவிக்கும் சாலைகளாக - அநாதைகளின் இல்லங்களாக - பஞ்சம், பட்டினி, பாவம், பகை முதலிய பொல்லாங்குகளின்மேல் படையெடுத்துச் செல்லும் போர்வீரர்களைப் படைப்பிக்கும் பாசறைகளாகத் திகழவேண்டுமென்று எண்ணியே இந்தத் துறையை ஏற்றுக்கொண்டீர்கள். "முன்னவனூர் கோயில் பூசைகள் முட்டிடின் மன்னர்க்குத் தீங்கு உள, வாரிவளங் குன்றும்" என்பது மந்திரவாக்கு. மக்களிடம் கடவுளுணர்ச்சி குன்றிய காரணத்தால் இன்றைய பஞ்சமும் பட்டினியும் விளைந்தன என்பதைச் சில மாதங்களாக நடத்தப்பெறும் விசேஷ பூசைகளால் மழையும் வளமும் சுரந்து உலகம் மகிழ்தற்கு உரிய அடையாளத்தை உணர்ந்துவருகின்றோ மாதலால், நாடு செழிக்க - வசியும் வளனும் பெருக - பசியும்

பிணியும் போக - திருக்கோயில்களில் வழிபாடும் ஆலயப் பராமரிப்பும் நன்ருக நடக்கவேண்டும் என்பதை எண்ணி எண்ணி ஆவனசெய்யும் தங்கள் அமைச்சுரிமை என்றும் நிலைத்த நலம்பயப்பதாகுக.

" உற்றதுகொண்டு மேல்வந் துறுபொருள் உணரும் கோளார்
மற்றதுவினையின் வந்ததாயினும் மாற்றல் ஆற்றும் பெற்றியர் "
—கம்பர்.

அருள்நிலையம் காண அமைச்ச ! வருக !!

எங்கள் ஆதீனம் சொக்கலிங்கப் பெருமானுடைய அருள் நிலையம். இங்குள்ள பொன்னும் மணியும் துரும்பும் தூசியுங் கூட அருளால் விளைந்த பொருள்கள். இப்பொருள்களுக்குத் தனித்ததோராற்றல் உண்டு. அருளுக்குள்ள ஆற்றல் அதனுல் விளைந்த பொருளுக்குத்தானே இருக்கும். நூலுக்குள்ள குணம் சீலைக்கும் உண்டல்லவா! மக்களுக்குமட்டும் உண வளிப்பது உண்மைப் பொதுவுடைமை அன்று. தாயிழந்து வருந்திய பன்றிக்குட்டிக்கும் பாலைக்கொடுத்து வளர்த்த பொதுவுடைமை எங்கள் சொக்கலிங்கப் பெருமானுடையது. அறிவாற் சிறந்த மக்களுக்குமட்டும் முத்தி கொடுப்பதல்ல பெருமான் நோக்கம். புல்லிய பறவைச் சாதிகளாகிய காகத் திற்கும் கரிக்குருவிக்கும் காளைக்கும் யானைக்குங்கூட இன்பம் கொடுப்பது இறைவன் நோக்கம். எதனையும் அளந்து கொடுப்பதன்று ஆண்டவன் கருணை; பெரும்பசிக்காரனுகிய குண்டோதரனுக்குக் கைகாட்டிவிட்ட அளவிலாக்கருணை இறைவன் கருணை; இப்படி எத்தனையோ சமத்துவச் செயல் கள். இத்தகைய சமத்துவமளிக்கும் பெருமானின் திருவரு ளாகிய மின்சாரம் நிறைந்த இடமே இந்தத் திருமடம். அதன் ஆற்றலால் எரியும் தெய்வ விளக்குகளே இருபத்தேழு தேவஸ்தானங்கள். வீசும் விசிறிகளே கல்விநிலையங்களும் கலாசாலைகளும் மடங்களும். அவை வீசும் காற்றே தமிழ்த் தென்றல்- வடகாற்று- ஆகம தேவாரங்களாகிய அசைந்து வரும் மெல்லிய பூங்காற்று எல்லாம். இத்தகைய அருள் நிலையத்தைச் செந்தமிழ் வரைப்பாகிய திருவேங்கட மலையில்,

அறிவுப்பாசறை அமைத்து அருட்கருவூலத்தைப் பாதுகாத்து வரும் அமைச்சர் பெருமானாகிய தாங்கள், நேரிற்காண்பது எல்லாவகையிலும் ஏற்றம் தரும் நிகழ்ச்சியாகும்.

“ஊருணி நீர்நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு” —வள்ளுவர்.

உலகத்தோடொத்து உயர்நிலைகாட்டி
இலகுறு மடத்தைக்காண வருக !

உலகத்தோடு ஒத்து நடத்தலே உயர்ந்த ஆசாரியன் உபதேசமுறை. இறைவன்கூட மானைக்காட்டி மானைப் பிடிப்பதுபோல மக்களாகிய நம்மை யாட்கொள்ள மானிடச் சட்டை சாத்தியே வருகிறார். அவர் அங்ஙனம் வந்தாலும் அந்தக் கடவுட்டன்மையிலிருந்து சிறிதும் இறங்குவதில்லை. அதுபோல இந்தத் திருவருள் ஸ்தாபனமும் பழமையான சம்பிரதாயங்களை விட்டுக்கொடுக்காமலே, காலத்திற்கு ஏற்ற வாறு கருத்தை விளக்கிச் செல்லுகின்றது. உதாரணமாக, ஹரிஜன ஆலயப்பிரவேசத்திற்கு அரசாங்கம் சட்டமியற்று தற்கு முன்பே அநுமதியளித்தது. “ஓடிவரும் காரணர்க்கு உண்மை வை” என்ற எமது குருநாதர் வாக்கின்வண்ணம் உபதேசவேட்கையோடுவரும் பக்குவர்களுக்கு உபதேசிக்கும் நிலையிலிருந்தும், பிரசாரவாகனங்கள் அமைத்து எங்கும் போய்ப் பிரசாரங்கள் செய்ய ஏற்பாடுசெய்தது; சைவசமயம் அன்புச் சமயமாதலின் அதில் திக்கற்ற குழந்தைகள் தவிக்க லாகாது என்று எண்ணி அநாதாச்சிரமத்தையும் திறந்தருளி யது. ‘சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்துக்கு’ என்ற ஞானச்செல்வரின் பொரு ளுரையை மனத்துக்கொண்டு திருவாசகத்திற்கு உரையெழுதி வெளிப்படுத்தியது. இன்று ஒழுக்கம் உயரத் திருக்குறள் முதலிய நீதிநூல்களைச் சிறந்த முறையில் வெளியிட்டுள்ளது. ஆதலால் காலமறிந்து கடவுள்கலையைப் பரப்பும் நிலையத்தைத் தாங்கள் காணுதலும் பொருத்தமுடைய செயலாம்.

இறைவன் ஆண்டவன்: யாமெல்லாம் அடிமை. இறைவன் நாயகன்: நாமெல்லாம் நாயகி என்னும் தாசதாஸ்ய

பாவமும், நாயகநாயகி பாவமுமே எங்கள் முடிபு. இவர்கள் இருவருக்கும் இடையிலிருந்து மறைப்பது அசித்தாகிய ஆணவம். இதன் வலியொடுக்கி ஒளிபெறுதலே ஞானம். இந்த ஞானத்தை அடைந்தவர்களே முத்தான்மாக்கள் என்பதே சித்தாந்தம். இக்கொள்கை நாட்டில் பரவ இன்பம் நிலைக்கும். இதுவே எங்கள் ஸ்தாபனத்தின் தத்துவக் கொள்கை. அதனையும் ஒத்துணர அன்பரீர்! வருக.

"என்னை அறிவென்றான் என்னறிவில் ஆனந்தந்
தன்னைச் சிவமென்றான் சந்ததமும்—என்னை உன்னைப்
பாரா மறைத்ததுவே பாசமென்றான் இம்மூன்றும்
ஆராய்ந்தவர் முத்தராம்" —குருஞானசம்பந்தர்.

நல்லனபெற்று நாளும் வாழ்க !

நல்லன வளர மனம் நன்னெறியில் நிலைபெறுதல் வேண்டும். அதற்கு அன்புநெறியே சிறந்த காரணம். அதனை விளக்குவன அன்புமுறைகள். அவைகளே ஞானசாதனங்கள், ஆதலின் சோபானக்கிரமமான தத்துவஞானங்களை விளக்கும் கேவலாத்துவைத முதலிய நாட்களுக்குப்பின் அன்புமுறை நாளை இன்று அமைக்கநேர்ந்த திருவருள், அந்த அன்பு முறையிலே மிக முறுகிய தங்களை இன்று தலைமைதாங்கச் செய்தது; ஆகவே அன்புமுறைநாளாகிய இன்றைய விழாவிற்குத் தாங்கள் தலைமைபூண்டு செவ்வனே நடத்திவைக்க விரும்புகிறோம். தங்களுக்கு எல்லா நலனும் தந்தருளச் செந்தமிழ்ச்சொக்கர் திருவடிகளைப் போற்றுகிறோம்.

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை."
—சம்பந்தர்.

326

வரவேற்பு நன்மலர்

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு எட்டாந்திருநாள் (1—6—53) திங்கட்கிழமை யன்று தலைமை வகித்த மயிலம், பொம்மையபாளையம் பெரியமடம் ஆதீனகர்த்தர்

ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலைய தேசிக சுவாமிகள் அவர்களுக்கு

அளித்தது.

தொண்டை நாட்டில் வண்டமிழ் வளர்க்கும் வள்ளால்!

பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே கிடந்து, சங்கத்து இருப்பிலே இருந்து, கற்ஹேர் நினைவிலே நிறைந்து நின்ற பைந்தமிழ், கொஞ்சகாலமாக ஆற்றல் அறியாத நிலைமைக்கு ஆக்கப்பட்டது. அந்நேரத்தில் செந்தமிழ் மொழி செங்கோலோச்சவேண்டும் என்ற செம்மையுள்ளங்கொண்டு, சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கத் தக்கதோர் தமிழ்க் கல்லூரி நிறுவி, தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்ந்தினிதுறையும் வடவேங்கடமுதல் தென்குமரிவரையில் தாங்கள் வளர்த்த பயிர் நற்பயன் அளித்துவருகின்றது. பல புலவர்கள் தங்கள் கடமைவழிநின்று, காலத்தின் வேகத்தில் கருத்தைச் செலுத்தாது 'நற்றவத்தை நான் மறக்கினும் நமச்சிவாயத்தை நா மறவாது' என்னுமாறுபோலத் தங்கள் நா நலத்தை நானிலத்திற்கு உணர்த்தி, நற்பேறுபெற்று நன்மைசெய்து வருகின்ருர்கள்.

செந்நெறி பேணும் செம்மால்! வருக.

ஆயிரம் ஆயிரமாக வாழ்ந்தாலும் அமைதியில்லாத வாழ்வு அறவாழ்வு ஆகாது என்பதை அவனி அறிந்து ஆக்கம் பெற, ஆத்மீக உணர்ச்சியை உணர்த்தவேண்டும் என்பதற்காகச் சாத்திரத்தையும் பரப்பி வருகின்றீர்கள். மேலும், அழுதபிள்ளைக்கே பாலுணவளிப்பாள் அன்னை என்பார்கள்.

அழவலியிலாக் குழவிக்குங் கொடுப்பாள் குற்றமற்றது மற்றவள் செயலே' என்னும் கொள்கைக்கேற்ப, கிராமங்களில் வாழும் மக்கள், 'சமயத்தை உணர்த்துவோர் இல்லையே, என்செய்வோம்' என்று ஏக்கமடைந்த நேரத்தில், அவர்கள் கருத்தறிந்து கல்லூரியில் பயிலும் காளைகளைக்கொண்டு உள்ளக் கழனிகளில் உழச்செய்து சமயப்பயிரைத் தழைக்கச் செய்து வருகிறீர்கள். இத்தொண்டினைப் பாராட்டாதார்யார்?

அறம்பல ஆற்றும் திறமுடைப் பெரியோய் !

'பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்' என்னும் பண்பாட்டிற்கியைய மயிலமலையில் மாண்பமர் முருகனுக்கு உரிய விழாக்காலங்களில் தக்க புலவர்களைக்கொண்டு கந்த புராணத்தை முறையேபயிற்றுவிப்பதும், முருகன் செந்தமிழ்க் கழகம் நிறுவித் தமிழ் வளர்ப்பதும், இளமையிலேயே இளஞ் சிறுவர்கள் இறையின்பம் எய்தவேண்டித் தேவாரபாடசாலை நிறுவித் தெய்வத் தமிழ் வளர்ப்பதும், வாரவழிபாட்டினைத் தக்க பெரியோர்களைக்கொண்டு வளர்த்து வருவதும், உயர்தரப் பாடசாலை முதலியன வைத்து மக்களுக்குக் கல்வி புகட்டுவதும், தொண்டர்படை நிறுவியிருப்பதும் தங்கள் அருட்செங்கோலின் ஆட்சிச் சிறப்பு என்பதை அறிந்து அக மகிழ்கின்றோம்.

சொற்சுவை பழுத்த தொகைத்தமிழ்க் கவிஞ !

சமயப்பணி, மொழிப்பணி, பொதுநலப்பணி ஆகிய பல பணிகளை ஒல்லும் வகையெல்லாம் செய்தருளுகின்ற எங்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள், துறைசை மகா சந்நிதானம், சிவாநந்தமகராஜ், சங்கராச்சாரிய சுவாமிகள் உள்ளிட்ட சிவாநுபூதிச் செல்வர்களின் திருவருள் நோக்கத்தையும் அடியேங்கள் பெற்றுய்யச் செய்கிறார்கள். அந்த முறையில் தங்களது அன்புமொழிகளையும் இன்று கேட்கும் பெருவாய்ப்பினை யாங்கள் பெற்றிருக்கிறோம். ஆகவே சைவ சித்தாந்தத் திருநாளாகிய இன்றைக்குத் தாங்கள் தலைமையேற்று மாநாட்டைச் சிறப்புற நடத்தித்தர வேண்டுகிறோம்.



மயிலம் சுவாமிகளும், தருமை மகா சந்நிதானமும்.

8-ம் திருநாளில் நாடகம்:

நாடகம்: 'பிள்ளைப் பாசம்'

நடிகர்கள்: ஆதீனக் கல்லூரியில் பயின்று ஆசிரியப்பணிபுரிகின்ற புலவர்கள்.

328

தருமபுர ஆதீனம்

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

நிகழ்ச்சி விபரம்

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளப்பாங்கின்வண்ணம் கடந்த நான்கு ஆண்டுகளாக ஆதீனம் ஸ்ரீ ஞானம்பிகாசமேத ஸ்ரீ ஞானபுரீஸ்வரசுவாமி மகோற்சவத்தைச்சார முன் பத்து நாட்களிலும் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு நடைபெற்றுவந்ததை அன்பர்கள் அறிந்திருப்பர். உலகப் பேரறிஞர்களும், ஆதீன வித்துவான் களும், திருக்கூட்டத்து அடியார்பெருமக்களும் அதில் கலந்து கொண்டு பேருரை வழங்க, மக்கள் செவிவாயாக நெஞ்சு களனாகக்கொண்டு அருந்தி இன்புற்றனர். அதில் நாடகங் களும், இன்னிசையரங்குகளும், ஏன் கவியரங்குங்கூட கலந்து விருந்தளித்தன. அந்த முறையில் இந்த ஆண்டிலும் 25—5—53 முதல் 3—6—53 வரை பத்துநாட்களும் மாநாடு மிகச்சிறப்பாக நடைபெற்றது. எல்லா மதங்களின் அடிப் படைத் தத்துவங்களையும் மக்கள் அறிந்துகொள்ளவேண்டும்; அப்பொழுதுதான் நம்முடைய சமயத்தின் சீரிய உண்மை புலப்படும் என்ற பெருநோக்குடன் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஏனைய மதங்களிலுள்ள சிறந்த அறிஞர்களைக் கொண்டு அந்தந்த மதச் சொற்பொழிவுகள் நிகழ்த்த ஏற்பாடு செய்திருந்தது இந்த மாநாட்டின் தனிச்சிறப்பாகும். ஆகவே இந்த மாநாட்டு நிகழ்ச்சியினை அனைவரும் மனமாரப் பாராட்டினர்.

மாநாட்டிற்கு வருவோர்கள் தங்குவதற்கு வசதியாக ஆதீனப் பாடசாலை, ஆதீனப் பல்கலைக்கல்லூரி, சாந்தநிலையம் ஸ்ரீ மெய்கண்டார் நிலையம் உள்ளிட்ட பல இடங்களில் வசதி செய்யப்பட்டிருந்தது. வருபவர்களைச் சென்று அழைத்து வரவும், அவர்கள் விரும்பிய நேரங்களில் கொண்டுபோய்

விடவும் ஆதீனப் பிரசார வாகனங்கள் இரண்டும் பயன்படுத்தப்பெற்றன. கோடைக்காலமாதலின் நீர் வற்றிய காவிரியில் நீர் பெருகிவர ஏற்பாடு செய்யப்பெற்றது. நீர்வளம் ஆதீனத்திற்கு வரும் மக்கட்கு அதிக மகிழ்ச்சியளித்தது; அதுமட்டுமல்ல; காவிரிக்கரையிலுள்ள மக்கள் அனைவருமே ஆனந்தத்தால் ஆதீனத்தைப் பாராட்டினர். இத்துடன் நகரெங்குமே தூய்மை; ஆதீன மடாலய முகப்பில் மிக அழகான பந்தல்; நடுவில் மேடை, மின்விளக்குகள் - மின் விசிறிகள் - வண்ணத்திரைகள் எல்லாம் பந்தலலங்காரமாக அமைந்து விளங்கின. ஒவ்வொரு தூணிலும் கட்டப்பெற்ற பொன்மொழி அட்டைகள் மக்களுக்கு நீதிகளை அறிவித்துக் கொண்டிருந்தன. ஒலிபெருக்கி சாதனமும் அமைக்கப் பெற்றிருந்தது.

தொடக்கவிழா :

25—5—53 திங்கட்கிழமை மாலை 5-மணிக்கே விழாப் பந்தலில் அன்பர்கள் கூடியிருந்தனர். இன்னிசைவாணர்கள் திருமுறைகளை ஓதினர். விழாத்தலைவர் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள், ஆதீன மடாலயத்திற்கு எழுந்தருளி, திருமஞ்சனமாதிகளை முடித்து விழாப்பந்தலுக்கு எழுந்தருளினார்கள். மணியும் 5-30 ஆயிற்று. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களும் விஜயமாகி ஆசிவழங்கினார்கள்; அவர்கள் ஆணைப் படி வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைவர் அவர்களுக்கு வரவேற்புரை கூறி, பொன்னாடை போர்த்தி, மலர்மாலை சூட்டி உபசரித்தார்கள்; அச்சிட்ட ஆசியுரையும் வாசிக்கப்பெற்றது. நிழற்படமும் எடுக்கப் பெற்றது. ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அன்போடு தலைமை ஏற்றுக்கொண்டு தலைமையுரையைப் பேசிமுடித்தார்கள். அதில் தமிழ்மொழியின் தனிச்சிறப்பும், இலக்கியத்தின் சிறப்பும், அதன்வாயிலாகப் பல உண்மைகளை நமக்கு உபதேசிக்கிற ஞானசாரியர்களின் தனிப்பெரும் சிறப்பும் குறிப்பிடப்பட்டன. அதுமட்டுமல்ல; ஸ்ரீ குமரகுருபர சுவாமி

களின் பலதிறப்பணிகளையும், அவர்களின் அநுபவ உரைகளையும், தம்மை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆட்கொண்டு அருள்பாலிக்கின்ற மேம்பாட்டினையும், குரு உபதேசமொழிகளை மக்கள் எவ்வெவ்வாறு பின்பற்றவேண்டும் என்பதையும், மாநாட்டின் குறிக்கோளையும் விளக்கித் தமது வணக்கத்தையும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்குச் சமர்ப்பித்துக் கொண்டார்கள்.

பிறகு சென்னை விவேகானந்தாகல்லூரித் தத்துவப் பேராசிரியர் திரு. சங்கரநாராயண ஐயர் M. A. அவர்கள் 'அத்துவைதம்' என்பதுபற்றியும், சென்னை பல்கலைச்செல்வர் திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை M.A., B.L., M.O.L., அவர்கள் 'கேவலாத்துவிதமும் சுத்தாத்துவிதமும்' என்பது பற்றியும் எளிய இனிய செந்தமிழ் நடையில் சொற்பொழிவாற்றினுர்கள். அடுத்து, திருமுறைகளில் விநாயகர் எப்படி எப்படி எல்லாம் காட்சி வழங்குகிறுர் என்பதுபற்றித் திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாதசாமிகள் செந்தமிழ்க் கல்லூரி விரிவுரையாளர் வித்துவான் திரு. சுந்தரேசம்பிள்ளை அவர்கள் வடமொழி மேற்கோள்களுடன் விரிவுரை நிகழ்த்திஞர்கள். இறுதியாகத் தலைவரவர்கள் கருத்துரைகூற ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நன்றிசொல்லக் கடவுள் வாழ்த்துடன் அன்றைய தொடக்கவிழா இனிது நிறைவேறியது.

2-ம் நாள் 26—5—53 செவ்வாய்:

அன்று விசிஷ்டாத்துவைதத்தின் தத்துவவுண்மைகள் விளக்கப்பட்டன. முதனுள்போலவே மாலை 5-30 மணிக்குக் கடவுள் வாழ்த்துடன் விழா ஆரம்பமாயிற்று. அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தத்துவப்பேராசிரியர் ஸ்ரீ இராமானுஜாசாரியார், M. A., அவர்கள் தலைமை ஏற்றுர்கள். அவர்களது தலைமையுரையில் மதத் தத்துவங்களின் விளக்கங்கள் நன்கு பிரதிபலித்தன. அதற்குப்பிறகு காரைக்குடி அழகப்பா பயிற்சிக் கல்லூரித் துணைத்தலைவர் ஸ்ரீ திருவேங்கடாசாரியார்

M. A., L. T., அவர்கள் 'திருப்பாவை' என்னும் தலைப்பில் பாவைப் பாடல் அமைப்பு முறை, ஒவ்வொரு பாடலிலும் காணப்படும் தத்துவக் கருத்துக்கள், எம்பெருமான் ஆய மகளிர்க்கு அருள் பிரஸாதிக்கும் முறை, பக்தர்கட்கு எளி வந்து அருள்வழங்கும் தன்மை, பாவைநோன்பின் விளக்கம், பெருமானைப்பற்றிய புராணவரலாற்றில் காணும் உண்மை கள், பாவைப்பாடலின் யாப்பிலக்கணம் ஆகிய பலவற்றை நன்கு விளக்கிப் பேசினார்கள். கந்தரனுபூதியில் கைவரப் பெற்ற நன்னிலம் பத்திரப் பதிவாளர் திரு. கோபிநாத் M. A., அவர்கள் முருகன் பெருமைகளையும், அவனை உபாசித்துப் பேறுபெற்ற அருளாளரின் தெய்வீகத் தன்மைகளையும், திருமுறைகளில் முருகனைப்பற்றிக் காணப்பெறும் புராண வரலாறுகளின் தத்துவக் கருத்துக்களையும் விளக்கிப்பேசினார் கள். சிறுத்தொண்டர் வரலாற்றினை ஆராய்ச்சிமுறையில் எடுத்துக்கொண்டு நெல்லை ம. தி. தா. இந்துக்கல்லூரித் துணைத்தலைவர் திரு. வ. பொன்னுசாமிபிள்ளை M. A., அவர்கள் மிக அழகாகச் சொற்பொழிவாற்றினார்கள். இறுதி யாகத் திருக்கடவூர் தேவஸ்தானக் கட்டளைவிசாரணை ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'திருமுறைப் பெருமை' என்பதுபற்றிப் பேசிய பிறகு கடவுள்வாழ்த்துடன் அன்றைய நிகழ்ச்சி நிறைவுற்றது.

3-ம் நாள் 27—5—53 புதன்:

துவைதமத சித்தாந்தச் சொற்பொழிவுகள் நடைபெற வேண்டியநாள். கடவுள்வாழ்த்துடன் விழா தொடங்கிற்று. சென்னைராஜ்ய முன்னையமைச்சரும், 'பாரததேவி' யின் ஆசிரியருமாகிய திரு. M. பக்தவத்ஸலம், B. A., B. L., அவர்கள் அன்றைய விழாத்தலைவராக அமர்ந்தார்கள், வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், அச்சிட்ட வரவேற்புநன்மலரை வாசித்தளித்து, மலர்மாலை சூட்டி உபசரித்து வரவேற்றார்கள். தலைவர் திரு. பக்தவத்ஸலம் அவர்கள் அன்பொடு தலைமை ஏற்றுத் தலைமையுரையைப் பேசினார்கள்.

அதில் 'கோயில்கள் கடவுளைச் சிந்திக்கத் துணைசெய்வன; வீண்பொழுது போக்குதற்குரிய இடங்களல்ல அவைகள். உலகம் பேரானந்தம்பெற அவைகள் சாதனங்களாகும். இறைவன் அகண்டபரிபூரணன்; அவனை நோக்க ஆன்மாக்கள் அணுவாகும். வெகுதூரத்திலுள்ள இறைவனை ஆன்மாக்கள் அடைய இத்தகைய விழாக்கள் பயன்படும். இவ்விழாக்களால் சமய உணர்ச்சி வளரும். இந்த விழாவைக் காணவேண்டும் என்ற நோக்கத்தால்தான் இங்கு தலைமை ஏற்க ஒத்துக்கொண்டேன். இதை யான் ஏற்றுக்கொள்ளாவிட்டால் விழாவைக் காணும் பாக்கியம் கிட்டாமல் போய்விடும். நான் ஒரு பாக்கிய சாலி. சிலர் மூடபத்தி என்பார்கள். அதுபற்றி கனம் ராஜாஜி அவர்கள் முன்னொருமுறை சொல்லியிருப்பது நினைவிருக்கலாம். ராஜாஜி சிறந்த பக்தர்; உலகோபகாரி, ஆதீன வெளியீடாகிய திருவாசகத்திற்கு அவர்கள் எழுதியுள்ள மதிப்புரையைப் படித்திருக்கின்றேன். அவர்கள் தம்பெருமை தாமறியாத் தன்மையர் என்பது அதில் விளங்குகிறது. சிறந்த அறிவாளிகளாகிய உங்கள் முன் எவ்வாறு யான் பேசமுடியும்? ஆனாலும் மகாசந்நிதானத்தின் அருள் என்னையும் அடிமையாக்கி இங்கு அமரச்செய்துவிட்டது. ஆகவே அவர்கள் இட்ட பணியைச் செய்தே தீரவேண்டும். ஆகவே ஏதோ சில பேசுகின்றேன். நமது மதக்கோட்பாட்டை அறியப் பல மதங்களின் தத்துவக் கருத்துக்களை உணரவேண்டும். அதற்கு இந்த மாநாடு ஒரு பெருவாய்ப்பு. இதுபற்றிச் சிலர் கருத்து வேறுபடலாம். சிலர் குறையும் கூறலாம். அவ்வாறு கூறுவது குறுகிய நோக்கத்தைக் காட்டுவதன்றிப் பரந்த நோக்கத்தைக் காட்டுவதாகாது. ஆகவே நாம் அக்கூற்றைப் பொருட்படுத்தலாகாது. இனி வழிபாட்டை எடுத்துக்கொள்வோம். சிலர் உருவ வழிபாட்டை வெறுக்கிறார்கள்; ஆனால் அவர்கள்கூட கடவுள் உண்டு என்று மறைமுகமாக நம்புகின்றார்; அவ்வாறு கூறுபவர்கள் தம் தலைவர்களின் உருவப்படங்களை வைத்துப்போற்றுவது எவ்வாறு பொருந்தும் என்பதையும் பார்க்கவேண்டும். ஆகவே அவவியக்கத்தையும் பொருட்படுத்தவேண்டியதில்லை. உலகமே ஒரு பெரிய பாலைவனம். பாலையில் நீர் இல்லை. வசதியில்லை. தங்க இடம் இல்லை. அப்படியிருக்கும்போது அங்கு செல்பவன் ஒரு குளிர்ந்த சோலையைக்கண்டால் என்ன ஆனந்தம் அடைவான். உலகமாகிய பாலையில் மடங்களாகிய சோலைகள்

விளங்குகிறது. சோலைகளை நாம் அடைந்தால்தானே ஆனந்தம். சிலர் கடவுள் எங்கே காட்டும் என்கிறார்கள். அமெரிக்க ஜனாதிபதியை ஒருவன் எப்படிப்பார்க்கமுடியும்? அங்கு செல்ல பாஸ்போர்ட்டு வேண்டும்; வாங்கப் பணம் வேண்டும்; எல்லாம் இருந்தும் போகும்போது கஷ்டம். கஷ்டப்பட்டால்தானே அங்கு சென்று அவரைப் பார்க்கமுடியும்? அதுபோல கொசுவாக உள்ள ஆன்மா எப்படி அருட்பிழம்பாகிய இறைவனைப் பார்க்கமுடியும்? இருட்டறையில் இருந்துகொண்டு சூரியனைப் பார்க்கமுடியுமா? மலபந்தத்தால் நாம் மூடியிருக்கிறோம். அது நீங்கவேண்டும். நீங்க அருள்பெறவேண்டும். பக்குவப்பட வேண்டும். பக்குவப்படுத்த இறைவன் குருவாக வருகின்றான். குருவே தெய்வம். குருவே அரன். குருவால்தான் மலபந்தம் நீங்கவேண்டும், இந்தவிஷயம் சிவஞானபோதத்தில் அழகாகச் சொல்லப்பட்டுள்ளது' என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

பிறகு குடந்தை டவுன் ஹைஸ்கூல் ஆசிரியர் பாரத பாகவத இராமாயண வேதாந்த வித்துவான் பிர்மஸ்ரீ M. ராமராவ் B. A., L. T., அவர்கள் இராமாயண பாரத மேற்கோள்களுடன் யாவரும் எளிதில் புரிந்துகொள்ளுமாறு துவைத சித்தாந்தத்தை விளக்கிக்காட்டினார்கள். அடுத்த தலைப்பு 'திருமுறைகளில் அம்மையார்' என்பது. அதுபற்றிப் பேசியவர்கள் திருச்சி மலைக்கோட்டை மௌனமடம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள். திருமுறையாசிரியர்கள் வரிசையில் பேசப்படும் அம்மை யார்? திருமுறைகளில் பேசப்பெறும் அம்மையார் யார்யார்? என்ற இரு பிரிவுகளாகப் பகுத்துக் கொண்டு, முன்னையதற்குக் காரைக்காலம்மையார் வரலாற்றையும், பின்னதற்குத் திலகவதியார், இசைஞானியார், இளையான்குடி மாறர் சிறுத்தொண்டர் முதலாகிய அடியார்களின் தேவிமார்கள், மங்கையர்க்கரசியார் ஆகியோர் வரலாறுகளையும் மேற்கோள்காட்டிச் சொல்நயம்படப் பேசினார்கள். இவ்வாறு பிரசங்க நிகழ்ச்சி முடிய மணி 9 ஆயிற்று. அதற்கு மேல் சுமார் 1½ மணிநேரம் வீணை விருந்து. விருந்தளித்தவர்கள் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சாமிகள் செந்தமிழ்க் கல்லூரி வீணையாசிரியர் திரு. R. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்கள் பார்ட்டியார்.

3384

4-ம் நாள் 28—5—53 வியாழன் ;

திருச்சி திரு. M. இராமசாமிக்கவுண்டர் அவர்கள் M. A. (Regional Inspector of Municipal Councils & Local Boards) அன்று தலைமைவகித்தார்கள். அவர்கள் பேச்சு அமைதியான பேச்சு. எளிய நடை. அவர்கள் தலைமையுரையில் ஜைனம், பௌத்தம் என்ற இரண்டின் தத்துவ உண்மைக் கருத்துக்கள் விளக்கப்பெற்றன. அத்துடன் 'வடநாட்டிலிருந்துவந்த ஜைனம் காஞ்சியிலும், கொங்கு நாட்டிலும், மதுரையிலும் தங்கியது. அப்பொழுது தமிழ் நாட்டரசர்களை வசப்படுத்தியது. ஜைனர்கள் வடமொழிப் பாண்டித்யம் பெற்று விளங்கினார்கள். இந்து மதத்தைத் தழுவி, கிறிஸ்தவ மதத்தைக் கண்டித்தார்கள். வேதநிந்தனை செய்தார்கள். பொதுவான நீதி நெறிகளைத் தழுவினார்கள். ஜைனமும், பௌத்தமும் ஏறக்குறைய 1000 ஆண்டுகள் பரவியிருந்தன புத்தமதக் கொள்கைகளில் சிறந்தவை சில இந்து மதத்தில் தழுவப்பட்டன. பின் நாளாக நாளாக அம் மதங்கள் நழுவலாயின. ஒவ்வோரிடத்திலும் புத்தவிகாரங் களும் ஜினாலயங்களும் சிவ விஷ்ணு ஆலயங்களும் ஒன்றுக் கொன்று அடுத்தடுத்துக் கட்டப்பட்டன. கடைச்சங்கத்தில் பௌத்த ஜைனப்புலவர்கள் விளங்கினர். ஜைன மதத்தில் 24 தீர்த்தங்கரர் போற்றப்பட்டார்கள். அருகனை அவர்கள் வணங்கினர். மணிமேகலை பௌத்த மதத்தைச் சார்ந்தது. சிவகசிந்தாமணி ஜைனமத நூலைச் சார்ந்தது. திருஞான சம்பந்தரும், மணிவாசகரும் முறையே பௌத்தத்தையும், ஜைனத்தையும் அடக்கிச் சைவத்தை நிலைநாட்டினர். அப்பர் சுவாமிகளும் ஜைன மதத்தை முதலில் தழுவித் தருமசேனர் என்னும் பட்டம் பெற்று விளங்கினார்; ஆனாலும் பிறகு இறைவன் அருளால் மீட்டும் தடுத்தாட்கொள்ளப்பெற்றுச் சைவமதத்தைச் சார்ந்தார். இவர் வரலாறு நீங்கள் அறிந்ததே. 7, 8, 9 ம் நூற்றாண்டுகளில் சைவ சமயாசாரியர்கள் சமய ஸ்தாபனம் செய்தார்கள்' என்றெல்லாம் குறிப்பிட்டுப்பேசி விளக்கினார்கள்.

பிறகு சென்னை திரு. சக்ரவர்த்தி நயினார் M.A. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியனுப்பியிருந்த ஜைனமத சித்தாந்தக் கட்டுரையை, சீகாழி சபாநாயக முதலியார் இந்து ஹைஸ்கூல் ஆசிரியர் பிர்மஸ்ரீ K. சுப்பிரமணிய ஐயர் B.A. அவர்கள் வாசித்தார்கள். பௌத்தமத தர்மங்களைத் தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரித் துணைத்தலைவர் வித்வான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் விளக்கி அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அடுத்து, பெங்களூர் செண்ட்ரல் காலேஜ் உதவிப்பேராசிரியர் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், வாசக மணி, வித்வான் திரு. S. ருத்திரபதி M.A. அவர்கள் வள்ளித் திருமணம் என்பதுபற்றிப் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அனைவர்க்கும் நன்றி தெரிவித்தார்கள்.

கடைசி நிகழ்ச்சி வில்லுப்பாட்டு. சாத்தூர் திரு. ச. பா. பிச்சைக்குட்டி அவர்கள் புதுவைக் கலாமன்றத்தின் சார்பில் பல மாணவர்களுக்கு வில்லுப்பாட்டுப் பயிற்சி அளித்திருக்கின்றார்கள். அவர்கள் நிகழ்த்தும் கதைகள் ஒவ்வொன்றும் சமய உணர்ச்சியை ஊட்டி மக்களைப் பரவசப் படுத்தும். அன்று அவர்கள் நிகழ்த்திய பார்வதி பரமேஸ்வரர் கல்யாணம் எல்லோர்க்குமே பக்தி உணர்ச்சியை உண்டாக்கிவிட்டது.

5-ம் நாள் 29—5—53 வெள்ளி:

இந்நாள் அன்புமுறைநாள்: அன்பையே அணிகலனாக் கொண்ட சென்னை ராஜ்ய அறநிலைய மந்திரி கனம் திரு. K. வேங்கடசாமி நாயுடுகாரு அவர்கள் B.A., B.L., அன்று தலைமைதாங்க இசைந்திருந்தார்கள். அவ்வண்ணமே கனம் மந்திரி அவர்கள் வருகையை முன்னிட்டு அன்பர்கள் பெருந் திரளாகக் கூடியிருந்தனர். மாலை மணி 5. கனம் மந்திரி அவர்கள் நகர்வலமாக விழாப்பந்தல் முகப்பிற்குக் காரில்வந்து சேர்ந்தார்கள். ஆதீனத்தின் சார்பில் மேளவாத்தியத்துடன் மலர்மாலை சூட்டி வரவேற்பு அளிக்கப்பெற்றது. நிழற்

படமும் எடுக்கப்பெற்றது. பிறகு சிவஞானசித்தியார் பாடவகுப்பினையும் கனம் மந்திரி அவர்கள் பார்வையிட்டார்கள். மணி 5-20 ஆயிற்று. திருக்கூட்டத்து அடியார்களுடனும் அன்பர்களுடனும் கனம் மந்திரி அவர்கள் மாநாட்டு மேடைக்கு வந்துசேர்ந்தார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் விஜயமானார்கள்.

கடவுள் வாழ்த்துடன் விழாதொடங்கிற்று. வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசியதோடு, கனம் மந்திரி அவர்கட்கு மிகப் பெரியதோர் வரவேற்புப் பத்திரத்தையும் வாசித்தளித்தார்கள்; மலர்மாலையும் சூட்டினார்கள். நிழற்படம் எடுக்கப்பட்டது. கனம் மந்திரி அவர்கள் அன்புமுறை நாளாகிய அன்றைக்குரிய தலைமைப் பதவியை அன்போடு ஏற்றுக்கொண்டு அன்போடு தலைமையுரை நிகழ்த்தினார்கள். எங்குபார்த்தாலும் யாரிடத்திலும் அன்பு காணப்பட்டது. சர்வம் அன்புமயம். கனம் மந்திரி அவர்கள் தலைமையுரையில்:

'அனைத்தையும்பெற அன்பேசாதனம். மகாத்மா காந்தி அடிகள்கூட அன்பினால்தானே சுதந்தரம் வாங்கிக்கொடுத்தார். இன்று உலகமே அன்புமயம். அன்பின்சக்தி அளவிடமுடியாதது. அன்பே ஆண்டவன்: அன்புவேறு ஆண்டவன்வேறு என்று எண்ணக்கூடாது. நமக்கு உண்மையான பக்தியிருக்கிறதா? கடவுளை உண்மையாக வணங்குகிறோமா? நம் சேவையில் உண்மையிருக்கிறதா? என்பன போன்ற பலகேள்விகள் எழுகின்றன. இந்தப் பரீக்ஷையில் நாம் வெற்றிபெற்று விட்டோம் என்று சொல்லிவிடலாம், இப்பொழுதுதான் எங்கும் ஆஸ்திகம் மலர்ந்துவருகிறது. ஆஸ்திகம் மலர்வதற்கு இதுபோன்ற விழாக்கள் மிகமிகச் சிறந்தவழிகாட்டியாகும். மேலும் விக்கிரகவழிபாடு தேவைதானா என்ற வினா எங்கும் கேட்கப்படுகிறது. விக்கிரகங்கள் இல்லாவிட்டால் ஒரு நெறியில் மனம் எப்படி இருக்கும்? அகண்டபரிபூரணனாகிய ஆண்டவனை மனக்கோயிலில் எப்படி அமைப்பது. அது சாத்தியமில்லையல்லவா? ஆதலால்தான் அர்ச்சாமூர்த்திகளை ஆலயத்தில்வைத்து வழிபடுகிறோம். அவ்வாறு வழிபடுவதால் அந்தவுருவம் மனதில் பதியும். எல்லாம் அவனுடையன;

அவனுல் நமக்குத்தரப்பட்டன என்ற செய்நன்றியறிதல் நமக்கு வேண்டப்படுவதொன்ருகும். அதனுல்தான் எல்லாப் பொருளேயும் பகவானுக்கு அர்ப்பணம் செய்து பிறகு நாம் ஏற்றுக்கொள்கிருேம். அர்ச்சாவதாரங்களே வெறும் வடிவம் என நினைப்பது தவறு. அவ்வாறு தவருக எண்ணி நம்மோடு மாறுபடுகின்ற மக்களிடத்திலும் நாம் அன்புகாட்டவேண்டும். வெறுத்துக் கோபித்தல் கூடாது. அவர்களுக்கும் நல்லபுத்தி கொடுக்குமாறு நாம் ஆண்டவனேப் பிரார்த்திக்க வேண்டும் என்றெல்லாம் ஆழ்வாராதிகள் அருளிய பாசுரங்களே ஆதாரங்காட்டிப் பேசினுர். மேலும் இந்த ஆதீன ஸ்தாபகர் ஒருமகா புருஷர். அவர் தெய்விகசக்தியினுல் இன்றுவரையிலும் இந்த ஆதீனம் விளங்கிவருகிறது. ஒன்றிரண்டு கோயில்களேப் பரிபாலிப்பதே மிகக்கடினம். இந்த ஆதீனமோ 27 கோயில்களேப் பரிபாலிக்கின்றது. மத கிரந்தங்கள் கிடைக்காத இந்தக் காலத்திலே எவ்வளவோ அநேக கிரந்தங்களே அச்சிட்டு எல்லார்க்கும் கொடுக்கிறது. இன்னும் பாடசாலேகள் கல்லூரிகள் நடத்துகிறது. சமயப்பிரசாரத்திற்கு நல்லவேலேசெய்கிறது. இத்தகைய பல பணிகள் வளர்ந்தோங்க வேண்டும். இது சைவ ஸ்தாபனமாக இருந்தாலும் பிறசமய உண்மைகளே எடுத்துச் சொல்ல இம்மாநாட்டில் சந்தர்ப்பம் அளித்திருக்கிறது. இது மகாசந்நிதானத்தின் விரிந்த மனத்தின் அன்பைக்காட்டுகிறது' என்றெல்லாம் ஆதீனத்தையும், ஆதீனப் பணிகளேயும் மிகப் பாராட்டினுர்கள்.

முதற் சொற்பொழிவு 'பரஞ்சோதியார் பக்திச்சுவை', பேசினவர் சென்னே கலேமகள் ஆசிரியர் வாகீச கலாநிதி. திரு. கி. வா. ஜெகந்நாதன் M. A., அவர்கள். 'பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளேயாடற் புராணம் என மூன்றும் மிகச்சிறப்புடையன. தெய்வமணக்கும் தகைமையன. வெறும் புராணம் என்று சொல்லி ஒதுக்குவது அறிவிற்குப் பொருத்தமானதன்று. அவ்வாறு ஒதுக்குபவர்களேச் சுவையறியாதவர்கள் என்றுதான் நாமும் ஒதுக்கவேண்டும். பத்தி வேறு பத்திச்சுவைவேறு. பக்திமான்களால்தான் அதனேச் சுவைக்க முடியும். தாம் சுவைத்தால்மட்டும் போதுமா? பிறரையும் சுவைக்கச்செய்ய வேண்டும் என்று சொல்லி

விருத்தகுமாரபாலரான படலம், கால்மாறியாடின படலம் இவைகளிலிருந்து சிலபாடல்களை எடுத்துச் சுவைகாட்டினார்கள். கனம் மந்திரி அவர்கள் மகாசந்நிதானத்தின் ஆணைப்படி புலவருக்குப் பட்டாடை போர்த்திப் பாராட்டினார்கள். கனம் மந்திரி அவர்களைக்கொண்டு, சிவஞானசித்தியார் பாட வகுப்பில் சேர்ந்து படித்த புலவர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் தகுதிப்பத்திரம் வழங்கப்பெற்றது.

பிறகு திருமுறைகளில் திருமால் என்பதுபற்றிப் பனசை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதசாமிகள் செந்தமிழ்க் கல்லூரி பிரின்ஸ்பால் வித்துவான் திரு. K. M. வேங்கடராமையா அவர்களும், 'நாதன்றன்பணி' என்பதுபற்றித் திருவாவடுதுறை ஆதீனம் வித்துவான், சித்தாந்த சைவமணி திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும் விரிவுரை நிகழ்த்தினார்கள்.

சொற்பொழிவுகளின் இடைஇடையே தருமை அருள் பெறு நெல்லை அருணகிரி இசைக்கழகத்தினர் 'சித்தாந்தத் தேன்' 'அறுகயிறுசல்' 'நிராசை' என்ற மூன்று சிறு நாடகங்களை மிகத் திறம்பட நடித்துக்காட்டினார்கள்.

6-ம் நாள் 30—5—53 சனி:

விவிலியதத்துவம் இன்று சிறப்பாகப் பேசப்பெறும் நாள். ஆகவே அம்மதப்பற்றுள்ளார் பலரும் ஏனையோரும் விழாமண்டபத்தில் பெருந் திரளாகக் கூடியிருந்தனர். முதல் பேச்சாளர் கட்டவாக்கம் ஸ்ரீ J. P. ரோட்ரிக்ஸ் அவர்கள். எடுத்துக்கொண்ட தலைப்பு 'கிறிஸ்துமத அடிப்படைக் கொள்கை', அவர்கள் பேச்சு சுமார் ஒருமணி நேரம் நிகழ்ந்தது. அவர்கள் தமது பேச்சில் 'நம்நாடு புனிதநாடு. குருசிரேஷ்டர்கள் பலர் தோன்றிய நாடு. கலாசாரங்கள் நிறைந்த நாடு. ஞானத்தில் தலைசிறந்த நாடு. பெருமான் புகழ்பாடி ஆனந்தமுறும் மக்கள் நிறைந்த நாடு. இத்தகைய நாட்டில்

நாத்திகம் பரவுகின்றது எவ்வளவு வருந்தத்தக்கதாக இருக்கின்றது. நம்நாட்டு மக்கள் பல்வேறு மதத்தினராயிருந்தாலும் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற தத்துவம் யாவர்க்கும் பொது. எங்கள் மதம் தோன்றி சற்றேறக்குறைய 2000 வருடங்கள் ஆகின்றன. விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் என்ற மூன்று ஜீவாதாரக் கொள்கைகளால் கட்டப்பட்ட கோட்டை என்று சொல்லிவிடலாம். பைபிளை வாசிக்கும்போது மனித புத்திக்கு எட்டாத பல விஷயங்கள் புலப்படுகிறது. மறுபிறப்பு, மோக்ஷம், நரகம் முதலியன மூளைக்கெட்டாத விஷயம், என்றாலும் நம்பத்தான் வேண்டியிருக்கிறது. ஜீவாதாரக் கொள்கையிலிருந்து பல கிளைகள் பிரிந்துசெல்கின்றன. 'அன்பே சிவம்' என்கிறார் இந்து, அன்பே கடவுள் என்று நாங்களும் சொல்கிறோம். இக்கொள்கை எல்லா மதத்தினருக்கும் உடன்பாடு. கிறிஸ்து நாதர் தம்மைச் சதிசெய்கின்ற சண்டாளர்களைப் பார்த்து 'அன்பனே' என அழைத்தார். தமது பிதாவைப்பார்த்து 'இவர்களை மன்னியும்' என வேண்டுகிறார். என்றெல்லாம் குறிப்பிட்டு அதற்குப் பல வரலாறுகளையும் மேற்கோள் காட்டி விளக்கினார்கள். இவர்கள் பேச்சு எளிய இனிய நடையில் அமைந்திருந்ததால் அனைவரும் மனமாரப் பாராட்டினார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆணைப்படி, சென்னை, பல்கலைச்செல்வர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இப்பேச்சினைப் பாராட்டிப் பேசி, மகாசந்நிதானத்தின் ஆசியாகப் பட்டாடை போர்த்திக் கௌரவித்தார்கள்.

பிறகு 'வில்லிபாரதத்தில் கண்ட சிவநெறி' என்பது பற்றி ஆதீனக் கல்லூரித் துணைத்தலைவர், வித்துவான் திரு ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். திருவையாறு அரசர்கல்லூரிப் பேராசிரியர் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான் திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் 'சிவபூஜை' என்ற தலைப்பில் பிரசங்கம் செய்தார்கள்.

முதனுள்போலவே இளங்கோ, கிம்பளம், சித்தாந்தக் கோமாளி என்ற மூன்று சிறு நாடகங்களையும் தருமை அருள் பெறு நெல்லை அருணகிரி இசைக்கழகத்தார் நடத்திக்காட்டினுர்கள். நாடகக்கலைதானே கற்ருேர்க்கும் மற்ருேர்க்கும் பயன்படுவது. ஆகவே அன்றும் மக்கள் பெருந்திரளாகக் கூடியிருந்து களித்தனர். உணர்ச்சிவயப்பட்ட ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் நாடகம் நடித்த அன்பர்கள் அனைவர்க்கும் பட்டாடை போர்த்தி ஆசிவழங்கினுர்கள். இந்நிகழ்ச்சிகள் முடிய மணியும் 9 ஆயிற்று,

பிறகு சுமார் இரண்டுமணிநேரம் கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் காந்திமகான் கதையினை மிக உருக்கமாக இசையொடு நிகழ்த்திஞர்கள். அவர்கட்கும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் பட்டாடை போர்த்தி ஆசி வழங்கிஞர்கள்.

7-ம் நாள் 31—5—53 ஞாயிறு :

இன்று ஞானபுரீஸ்வரசுவாமி மகோற்சவத்தில் திருக் கல்யாணத் திருநாள் திருவிழாவை முன்னிட்டு மக்கள் கூட்டம் அதிகமாகவே யிருந்தது. இரவு 7 மணிக்குமேல் ஆலயத்தில் திருமணத்தை முன்னிட்டு நடைபெறும் கிரியைகள் நிகழ்ந்துகொண்டிருக்கும். ஆதலால் 7மணிக்குள் அன்றைய கூட்டம் முடிவுற வேண்டும். ஆகவே சரியாக ஐந்து மணிக்கே கடவுள் வாழ்த்துடன் கூட்டம் தொடங்கிற்று. தருமபுர ஆதீனத்தில் சைவசித்தாந்த சரபம் என்ற பட்டம் பெற்றவர் பழநி காசிவாசி சிவஸ்ரீ ஈசானசிவாசாரியார். அவர்கள் பேச்சு மிகத்தெளிவானது. பிரசங்கியார்களுக்கு ஒரு வழிகாட்டி என்றுகூடச் சொல்லிவிடலாம். ஒவ்வொரு சொல்லிலும் சைவ மணம் வீசும். இத்தகைய பேச்சுதான் திருமணநாளின் முதற்பேச்சாகத் திகழ்ந்தது. ஆகவே சிவஸ்ரீ சிவாசாரியார் அவர்கள் ‘சைவசமயம்’ என்ற தலைப்பில் சுமார் ஒருமணிநேரம் அருமையான சொற்பொழிவு நிகழ்த்திஞர்கள். எல்லோர்க்கும் ஆனந்தமாக இருந்தது

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் புலவர்களின் புலமை யறிந்து வரிசையளிக்கும் பெருங்குணம் படைத்தவர்கள். ஆகவே சிவமணம் கமழும்படிப் பேசும் பேரறிஞரை எவ் வாறு போற்றுவது என்று திருவுளத்தெண்ணிய அவர்கள் சிவாசாரியசுவாமிகளை அருகிலழைத்து விலையுயர்ந்த பொன் னாடை போர்த்தி ஆசிவழங்கியருளினார்கள். அது ஒரு தனி ஆனந்தக்காட்சி. ஆசிபெற்ற சிவாசாரிய சுவாமிகளும் மீண்டும் ஒருமுறை தமது நன்றியைத் தெரிவித்துக்கொண் டார்கள். அவர்களது மன நெகிழ்ச்சி காண்போர்-கேட்போர் ஆகியோர்களின் மனத்தையும் உருக்கிவிட்டது.

சிவகருணை இப்படித்தான் இருக்குமோ என்று அனை வரும் எண்ணி இன்புறுமாறு, சென்னை லேடி வில்லிங்டன் கல்லூரி விஞ்ஞானப் பேராசிரியை திருமதி E. T. ராஜேஸ்வரி யம்மையார் அவர்கள் 'சிவகருணை' என்ற தலைப்பில் அருமை யான பிரசங்கம் நிகழ்த்தினார்கள். சென்னைப் பல்கலைக்கழகம் ஜூனியர் லக்சரர் பண்டித வித்துவான் திரு. B. R. புரு ஷோத்தமநாயுடு அவர்கள் 'இராமாவதாரம்' என்ற தலைப்பில் இராமாவதாரத்தின் சிறப்பையும், அவதாரத்தின் தத்துவப் பொருளையும், இராமபிரானுடைய அளவிலாற்றலையும், அத்தகைய பிரான் நம்போன்ற ஆன்மாக்கள் கடைத்தேற வேண்டி எவ்வெவ்வாறெல்லாம் எளிவந்து கருணைபாலிக் கின்றான் என்பதையும், இராமாயணம் திருவாய்மொழி சிலப்பதிகாரம் உள்ளிட்ட பலநூல்களிலிருந்து சிலபாடல்களை எடுத்துக்காட்டி விளக்கிப்பேசினார்கள். மணியும் 7-30 ஆயிற்று. பிறகு வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனைவர்க்கும் நன்றிகூறக் கடவுள் வாழ்த்துடன் அன்றைய நிகழ்ச்சி நிறைவெய்தியது.

8-ம் நாள் 1—6—53 திங்கள் :

அன்றையநாள் சைவசித்தாந்தம் என்ற தலைப்பில் அமைந்தது. அன்றையதலைவர் மயிலம் பொம்மையபாளையம் பெரியமடம் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலைய தேசிக சுவாமிகள் அவர்கள். தலைவர் எழுந்தருளி யிருத்தற்கு

வடக்குவீதியிலுள்ள ஆதீனத்தேவாரபாடசாலை கட்டிடத்தில் தகுந்த வசதி செய்யப்பெற்றிருந்தது. மாலை 4-30 மணிக்கெல்லாம் ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களும், ஆதீனக் கல்விநிலையமாணவர்களும் ஏனைய அன்பர்களும் வரவேற்கக் குழுமியிருந்தார்கள். மணி 5 ஆயிற்று. மயிலம் சுவாமிகள் காரில் எழுந்தருளியானார்கள். சிவநாம முழக்கத்துடன் மலர்மாலை சூட்டி வரவேற்பு அளிக்கப்பெற்றது. பிறகு சுவாமிகள் அவர்கள் அங்கேயே திருமஞ்சனம் நித்யானுட்டானுதிகளை முடித்துக்கொண்டு புறப்பட்டார்கள். யானை, குடை, கொடி, ஆலவட்டங்கள் முதலியன அழகுசெய்தன. மாணவர்கள் சிவபுராணம் ஓதிவந்தனர். மேளவாத்தியம் முழங்கியது. இவ்வாறு மயிலம் சுவாமிகளை உபசாரத்துடன் அழைத்துக்கொண்டு வரப்பட்டது. இடையில் ஸ்ரீ தர்மபுரீசுவரராலயத்தில் வழிபாடும் நடத்திக்கொண்டு மாநாட்டு மேடைக்கு எழுந்தருளியானார்கள். மணியும் 6-30 ஆயிற்று. தருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் மேடையில் எழுந்தருளி யிருந்தார்கள். இருவர்களும் ஒருவர்க்கொருவர் பொன்னுடை போர்த்தி உபசரித்துக்கொண்டார்கள். கடவுள் வாழ்த்துடன் விழா ஆரம்பமாயிற்று.

ஸ்ரீ.ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் விழாத்தலைவராகிய மயிலம் சுவாமிகளைப் பாராட்டிப்பேசினார்கள். பாராட்டுரை வருமாறு:-

ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் மகோற்சவத்தில் இன்று எட்டாந் திருநாள். எண்குணத்தானுக்கு ஏற்றநாள் இது. மிகச்சிறந்த நாள் இன்றையநாள். எப்படி? சாத்திரத்தில் பாருங்கள் 12 சூத்திரங்களுள் எட்டாங் சூத்திரத்தை இப்பொழுது நாம் நினைக்கவேண்டியது. அதன்கருத்து என்ன? பஞ்சேந்திரியங்களாகிய வேடர்கள் வலையிலே அகப்பட்டுத் தவித்துக்கொண்டு தலைவன் இன்னன் என்பதையும் அறியாது வருந்துகின்ற உயிர்கள்மீது அரன் இரக்கங்கொள்வான். இரக்கங்கொண்ட அவன் குருமூர்த்தமாக எழுந்தருளிவந்து வேடர் குழலினின்றும் நீக்கி மலம் போக்கித் தானாக்கித் தமது திருவடிக்கீழ்வைத்து அருள் செய்வன் என்பது. அந்த வகையிலே எட்டாந் திரு

நாளாகிய இன்று ஒருகுரு 'தம்முதல் குருவுமாய்' என்ற வகையில் ஒருதலைவர், ஒரு நாள் தலைவர் பலநாள் தலைவரல்ல நிரந்தரமான ஒருமடத்துத் தலைவர். தலைமைதாங்குவது எவ்வளவு பொருத்தமானது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இன்றுவரையில் முறையாக ஒவ்வொரு மதத்தின் தத்துவங்களைச் சிறப்பாகக் கேட்டீர்கள். நேற்றுப் பொதுவகையில் 'பொது நிலை' என்ற தலைப்பில் சிந்தித்தீர்கள். இன்று அவைகளின் முடிந்தமுடிபாயுள்ள சைவசித்தாந்தத்தைச் சிந்திக்கும் வாய்ப்பு உங்கட்குக் கிடைத்திருக்கிறது. இது எல்லாருக்கும் கிடைக்குமா கிடைக்காது என்று குமரகுருபரரே சொல்லியிருக்கிருர். 'ஒரும் வேதாந்தத்து உச்சியிற்பழுத்த ஆரா இன்ப அருங்கனிபிழிந்து சாரங்கொண்ட சைவசித்தாந்தத் தேனமுது அருந்தினர் சிலரே' என்பது அவர்வாக்கு. ஆகவே நீங்கள் அதிர்ஷ்டசாலிகள். தேனை அருந்தப் போகின்றீர்கள். அதுவும் ஆனந்தத் தேன் அல்லவா? அருந்தியவுடன் சிவமெனும் மென்முளைதோன்றும். மலம் தானகவே நீங்கிவிடும். சித்தாந்தமும் இன்று நேற்று தோன்றியது அன்று. சித்தாந்த ஞானேபதேசத்தின் மூலகுரு பரம்பொருளே. அத்தகைய அநாதிப் பரம்பொருளை அழிக்க யாரால் முடியும்? இந்த ஆதீனத்தின் ஏழாவது குருமூர்த்திகள் காலத்தில், இந்த ஊரின் ஓரமாகத் தஞ்சை மன்னன் கடலாடக் காவிரிப்பூம்பட்டினம் நோக்கிச்சென்ருன். செல்லுகின்றவன் சிலர் துர்ப்போதனையால் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் கோயிலையே இடித்துவிடுமாறு கட்டளையிட்டான். ஏவலாளர்களும் இடிக்கத்தொடங்கினர்கள். அதனைக்கண்ட அடியார்கள் குருமூர்த்திகளிடம் விண்ணப்பித்தார்கள். திருச்செவியேற்ற அவர்கள் 'நீங்கள் ஏன் பயப்படவேண்டும், தேசம் சிவாலயங்கள் சேர அலைய ஒரு மோசம் வந்ததையோ முதல்வனே! தேசத்து மன்னை வெறுப்பேனே? வருவினையை ஊட்டுவிக்கும் உன்னை வெறுப் போனே? உரை. ஈசன் பலகீனன் என்றக்கால் ஆலயத்துள் மோசம் வந்ததென்று மொழியலாம்; ஈசனே ஆக்குவதும் ஆக்கி அழிப்பதுவும் தானுனல் நோக்குவதென் யாம் பிறரைநொந்து? என்று சொல்லித் தேற்றினர்களாம். அதுபோல அத்தகைய பரம்பொருளுக்கு ஒருகாலமும் மோசம் வராது. அப்படி மோசம் வந்தால் அதுதான் பரம்பொருளாகுமா? அதுபற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. 'எல்லார்க்கும் முன்னே முளைத்தானை' என்பது போல அப்பொருள் தோன்றிய

காலத்தை அளவிட்டுச் சொல்லமுடியுமா? ஆகவே சொன்ன பரம்பொருளும் அநாதி; சொல்லப்பட்ட பொருளும் அநாதி. சாத்திரமும் அநாதிதொட்டே உள்ளது. இத்தகைய சிறந்த சைவசித்தாந்த நாளிற்குத் தலைமைவகிக்கும் இவர்கள் மிகப் பண்பாடு உள்ளவர்கள். இவர்களோடு முன்னொருமுறை மயிலத்தில் கலந்து அளவளாவியிருக்கிறோம். இவர்கள் பேச்சு மிகக் கனிவாக இருக்கும். அன்போடு கலந்துவரும்; சிவம் மணக்கும்'

என்றெல்லாம் பாராட்டிப் பேசியதோடு, வரவேற்பினை வாசித்தளிக்குமாறு ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்கட்கு ஆணைவழங்கினார்கள். அவ்வண்ணமே வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வாசித்து வரவேற்பு மலரைச் சமர்ப்பித்தார்கள்.

வரவேற்புரையை அன்போடு ஏற்றுக்கொண்ட மயிலம் சுவாமிகள் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தியருளினார்கள், அவர்களால் அச்சிடுவித்துக் கொண்டுவரப்பெற்ற தலைமை யுரை வெளியீடு அனைவர்க்கும் வழங்கப்பெற்றது. தலைமை யுரையில்,

'சமய உண்மைகளை உணர்த்துபவர்களும் உணருபவர் களும் அருகியதால் சமயஉணர்ச்சிகுன்றிவருகின்றது. நாத்திகம் பரவுகின்றது. கண்டதே காட்சி கொண்டதே கோலமாகத் தடுமாற்ற நிலையில் மக்கள் உள்ளனர். இந்தநிலை மாற சமயத்தலைவர்கள் ஒன்றுகூடிக்கலந்து பணிசெய்யவேண்டும். அவ்வாறு கலந்து செய்யும் பணியில் முன்னேற்றம் அடைந்து விளங்குவது தருமையாதீனம். இவ்வாதீனத்தின் சேவை மிக மிகப்பாராட்டத்தக்கது. இத்தகைய மாநாடுகள் கூட்டுவதும், பிற சமயச்சொற்பொழிவுகளை அவ்வத்துறையில் வல்ல அறிஞர் களைக்கொண்டு நிகழ்த்தச் செய்வதும் எவ்வளவு சிறந்தபணி என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். இத்தகைய மாநாடுகள் சமயப் பூசலைக்குறைத்து ஒற்றுமைவழியைக் காட்டுமல்லவா? ஆகவே யாவரும் ஒன்றுபட்டுக் கடவுள் உணர்ச்சியை நாட்டில் முதலில் பரப்பவேண்டும். சிவத்தோடு சம்பந்தமுடையது சைவம், சிவநெறி வீரசைவநெறிக்குப் புறம்பானதல்ல.

அங்கேயும் அடியார் வழிபாடு; இங்கும் அடியார்வழிபாடு. இது போன்ற பல வகையில் ஒற்றுமை காணலாம்'

என்றெல்லாம் பலபட விரித்துப் பேசியதோடு. வீர சைவர்களுக்குக்குரிய அஷ்டாவரணம், மூவகை தீக்ஷை ஆகியவைகளையும் வீரசைவத்தின் தத்துவப்பொருளையும் நன்கு விளக்கிக் காட்டினார்கள்.

அடுத்து, காஞ்சிபுரம் பச்சையப்பன் ஹைஸ்கூல் கணித ஆசிரியர், தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர், சித்தாந்த சிகாமணி திரு. க. வச்சிரவேலு முதலியார் B. A, L. T., அவர்கள் தமக்கே உரிய அமைதியான சொல்லாற்றலால் 'சைவசித்தாந்தத்தை' விளக்கிப் பேசினார்கள். இவர்கள் பேச்சும் மிக அழகான பேச்சு. இரண்டாவதாக மதுரை திரு. T. சுந்தரஞ் செட்டியார் B. Com., அவர்கள் 'நமது சமயத்தின் இன்றைய நிலை' என்பதுபற்றிச் சொற்பொழி வாற்றினார்கள் அதில் சமய உணர்ச்சி குன்றிவருவதன் காரணத்தையும், சமய உணர்ச்சி வளரச் செய்யவேண்டிய திட்டங்களையும், சமயத்தின் அடிப்படை கடவுள் வழிபாடே என்பதையும் விளக்கி, சமயவளர்ச்சித்துறையில் ஆதீனம் செய்துவருகின்ற சேவைகளையும் பாராட்டினார்கள். திரு. செட்டியார் அவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், பொன்னாடை போர்த்தி ஆசீர்வதித்தார்கள்.

பிறகு மயிலம் ஸ்ரீமத் சிவஞானபாலைய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி பிரின்ஸ்பால் வித்துவான் திரு. சி. துரைசாமி ஐயர் அவர்கள் 'பிரபுலிங்கலீலை' என்ற தலைப்பில் சிவப் பிரகாசர் சிறந்த கற்பனைக்களஞ்சியம் என்பதற்குப் பல பாடல்களை எடுத்து நயம்பட விளக்கினார்கள். இவ்விரு புலவர் பெருமக்களுக்கும் மகாசந்நிதானம் அவர்கள் பட்டாடை போர்த்தி ஆசி அருளினார்கள். மணியும் 9 ஆயிற்று.

எட்டாந் திருநாளாதலின் சாத்திரத்தின் எட்டாஞ் சூத்திரக் கருத்தை விளக்கும் முறையில் 'மன்னவன் மகன்' அல்லது பிள்ளைப்பாசம் என்ற நாடகம் நடித்துக்காட்டப்

3476

பட்டது. 'மன்னவன்றன் மகன் வேடரிடத்தே தங்கி' என்ற சித்தியார் 8-ம் சூத்திர முதற்பாடல் இந்நாடகத்திற்கு மூலம். தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரியில் பயின்று தேறிப் பல கல்லூரிகளில் ஆசிரியராகப் பணிபுரியும் புலவர் பெருமக்க ளால் இந்நாடகம் நடிக்கப்பெற்றது. நாடக முடிவில் காசிவாசி சிவஸ்ரீ ஈசானசிவாசாரியார் அவர்கள் நாடகத்தின் தத்துவக் கருத்தை எடுத்துக்கூறி, நடிகர்களையும் பாராட்டிப் பேசினார்கள். பிறகு வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் நன்றிகூறக் கடவுள் வாழ்த்துடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

9-ம் நாள் 2—6—53 செவ்வாய்:

இன்று அருள் நூல்களைப் பற்றிப் பேசவேண்டிய திருநாள். தலைமை தாங்கிச் சிறப்புற நடத்தியவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர், சொல்லின் செல்வர், திரு. ரா. பி. சேதுப்பிள்ளை B.A., B.L, அவர்கள். புலவர்வரிசையில் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களில் இவர் ஒருவர்; சிறந்த அறிஞர். இவர்கள்பேச்சு செவிக்கு உணவாக இருந்து வயிற்றுணவைக்கூட மறக்கச்செய்து விடும். ஒவ்வொரு சொல்லிலும் தமிழ்மணம் கமழும். இத்தகைய சிறந்தபேரறிஞரையும் சொற்பொழிவாளர்களை யும் ஏனைய அன்பர்களையும் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்றார்கள். திரு. பிள்ளையவர்கள் தலைமை ஸ்தானத்தில் அமர்ந்து, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக் குத் தமது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். பிறகு தலைமையுரையைத் தொடங்கினார்கள், தலைமையுரை அமைதியான - ஆழமான - எளிய இனிய தமிழ் நடையில் சென்றுகொண்டிருந்தது.

'இறைவன் திருவருளில் மூழ்கித் திளைத்த பெருமக்கள் அருளிச்செய்தவையே அருள்நூல்கள். அவையே இறைவன் திருவடியடையச் சாதனங்கள். இவையன்றி நீதி நூல்களும் உண்டு; பொருள் நூல்களும் உண்டு. அருளையும் பொருளையும்

3HD

இணைத்துக்காட்டுகிறார் திருவள்ளுவர் அருளிலார்க்கு அவ் வுலகமில்லை பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை என்று. அருள் நூல் இருப்பதுபோலவே அருட்டுறையும் இருக்கின்றது. திருவெண்ணைநல்லூரில் உள்ள ஆலயத்திற்கு அப்பெயர் வழங்குகின்றது. சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட பெருமான் அங்கு இருக்கிறார். எப்படிப் பாடுவேன் என்று கவன்ற சுந்தரருக்குப் பெருமான்; 'பித்தா' என்றழைத்தனையாதலால் அதனை முதலாகக்கொண்டே பாடுக' என்று சொன்னார். அப் படியே அவரும் பாடத்தொடங்கினார். அருட்டுறைமட்டுமா இருக்கிறது. தவத்துறையும் உண்டு. அதுவும் சிறந்த தலம். அரநெறி என்றொரு தலமும் இருக்கிறது. இத் தலங்களெல்லாம் பெருமையுடையன. பெருமைக்குக் காரணம் பாடல்பெற்று விளங்குவது. 'இது பாடல்பெற்ற தலமா' என்று சிலர் கேட்பதைப் பார்த்திருக்கலாம். ஆகவே பாடலுக்குத் தமிழ் நாட்டில் அவ்வளவு மதிப்பு. அப்பாடல்தாம் அருட்பாடல். உயிர்க்குறுதி பயப்பது அதுவே. வீட்டின்பம் பெறச் செய்வதும் அதுவே. இத்தகைய அருட்பாடல்கள் இருப்பது தமிழ் மொழிக்கே சிறப்பாகும். இப்பாடல்கள், ஆண்டவனைக்கண்டு பாடிய பாடல்களல்லவா? என்றெல்லாம் அருணூலின் சிறப் பினைத் தலைமையுரையில் விளக்கினார்கள். அடுத்துவருகின்ற பேச்சுக்குத் தோற்றுவாயாக 'வாலி சிவபூசைசெய்த சிறப்பு, பூஜை செய்ததால் அவன்பெற்ற வரம், அவ்வர பலத்தால் எதிர்நிற்கலாற்றாத இராமபிரான் மறைந்துநின்று அம்பு தொடுத்தல், சிவபூஜை செய்ததால் வாலி 'வாலியார் வழிபட' என்று ஆர்விகுதி கொடுத்துப் பாராட்டப்பெறுதல். இராவண னின் சிவபக்தி ஈடுபாடு, மண்டோதரியின் மாண்பு முதலிய பல கருத்துக்களைச் சுவைபடப் பேசி அத்தகைய அடியார்கள் தேவாரத்தில் – திருவாசகத்தில் எங்கெங்கெல்லாம் பேசப்படு கின்றார்கள் என்பதையும் எடுத்துக்காட்டினார்கள்.

பிறகு தேவகோட்டை 'செட்டிநாடு' ஆசிரியர், தருமை ஆதீன வித்துவான், விரிவுரையரசு, பாலகவி, திரு. வே. இராம நாதன் செட்டியார் அவர்கள் 'திருமுறைகளில் அடியார்கள்' என்ற தலைப்பில் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அவர்கள் பேச்சு கருங்கன் மனத்தையும் கனியச்செய்தது. அதனை அடுத்து மதுரை 'தமிழ்நாடு' உதவியாசிரியர்

திரு. M.SP. சண்முகம் அவர்கள் 'பண்பாட்டின் சிகரம்' என்று எடுத்துக்கொண்டு, பண்பாடு என்பதன் இலக்கணத்தையும், பண்பாடு அடியார் பெருமக்களிடத்து எப்படி எப்படி அமைந்திருந்தது என்பதையும், பண்பாட்டின் சிகரத்தை யடைந்த மெய்ப்பொருள் நாயனர், இயற்பகையார், இளையான் குடி மாறர் ஆகியோர்களின் சரித்திர நுட்பங்களையும் விளக்கினார்கள். பிறகு வழக்கம்போல் சுவாமிகள் நன்றிகூறக் கடவுள் வாழ்த்துடன் நிகழ்ச்சி முடிந்தது.

10-ம்நாள் 3—6—53 புதன் :

இன்று மாநாடு நிறைவுநாள். அருள்நூலால் சாதிக்கப் பெறுவது சிவஞானமாதலின் இன்றைய நாளுக்குச் சிவஞானம் என்ற தலைப்பு அமைக்கப்பட்டிருந்தது. ஆதீன ஸ்தாபகர் குருபூஜைப் பெருவிழாவும் இன்றுதான். ஞான புரீஸ்வரர் மகோற்சவத்தில் இறைவன் தீர்த்தங்கொடுத் தருளுதலும் இன்றுதான். ஆகவே இந்நாள் மிகச் சிறப்புடையது.

மாநாட்டு நிகழ்ச்சி காலை 9-மணிக்குத் தொடங்கிற்று. இன்னிசைவாணர்கள் திருமுறை ஓதினர். திருவாரூர் இராஜன்கட்டளை விசாரணை, ஆதீனப் பிரசாரகோஷ்டித் தலைவர், ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமை ஏற்றார்கள். தலைமையுரையில் சித்தாந்த சாத்திரத் தின் கருத்துக்கள் நன்கு விளக்கப்பட்டன. தொடர்ந்து சொற்பொழிவுகள் நடைபெற்றன.

நாகை நாஷனல் ஹைஸ்கூல் தமிழாசிரியர், தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான், திரு. வை. மூ. சண்முக தேசிகர் அவர்கள் 'உயிர்' என்பதுபற்றியும், சென்னை கார்ப்பொரேஷன் ஹைஸ்கூல் தமிழாசிரியர், தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம்பிள்ளை அவர்கள் 'குரு' என்பதுபற்றியும், தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், மதுரகவி, சித்தாந்தரத்னகரம், வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'பாசவீடு' என்பதுபற்றியும் விரிவுரை நிகழ்த்தி

னர்கள். இறுதியாகத் தேவாரங்கட்குக் கல்வெட்டுக்கள் எந்த அளவில் துணைசெய்கின்றன என்பதைக் குத்தாலம் போர்டுஹைஹஸ்கூல் தமிழாசிரியர், வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் விளக்கிப் பேசினர் கள். தலைவர் அவர்கள் முடிப்புரைகூறக் கடவுள் வாழ்த் துடன் விழா இனிது நிறைவுற்றது.

தருமபுர ஆதீனத்தில் குருபூஜை விழா.

தருமபுர ஆதீனஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளின் குருபூஜைவிழா 3—6—53 புதன்கிழமை மிகச்சிறப்பாக நடைபெற்றது. அன்றுமுழுவதும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உபவாசமிருந்து இரவு பூஜை முடித்து மறுநாள் மாகேஸ்வரபூஜை செய்விப்பது வழக்கம். அன்றுகாலை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவசதேசிக பரமாசாரிய சுவாமிகள் குருமூர்த் தத்திற்கு விசேஷ அபிஷேக ஆராதனைசெய்து வழிபாடாற் றினார்கள். பிறகு வழக்கம்போல் தேவஸ்தானங்களிலிருந்து விபூதிபிரசாதம் பார்க்கப்பட்டது. குருபூஜையை முன்னிட்டு விஜயம்செய்திருந்த திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஜூனியர் வித்துவான் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கும் தேவஸ்தானங்களின் விபூதிபிரசாதம் பார்க்கப்பட்டது. சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

மணி 11 ஆயிற்று. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பூஜைக்கு எழுந்தருளியானார்கள். இன்றுநடைபெறும் பூஜை மிகவிசேஷமானது. ஏராளமான அன்பர்கள் தரிசனத்திற்கு வருவார்கள். வழக்கம்போல் அன்றும் அன்பர்கள் கூட்டம் அதிகம். அபிஷேகங்கள் முறைப்படி ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்றன. மணியும் 12 ஆயிற்று. ஆராதனையும் தொடங் கிற்று. அன்பர்கள் ஆனந்தமாக வழிபட்டார்கள். "ஈரெண் திறத்துபசாரமும் வாய்ப்பப் பூசனை புரியும் தேசிக" என்ற குமரகுருபரரின்வாக்கு அன்பர்கள் உள்ளத்தெழுந்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் யாவர்க்கும் பிரசாதம் அளித்தார்கள். குருபூஜை விழாமலராக அச்சிட்ட திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை வெளியீட்டையும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

குருபூஜைத் திருநாளில்:

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்
காவிரித் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளியாதல்

சுவாமிகட்கும், ஆதீனத்து அடியார்கட்கும், அன்பர்கட்கும் வழங்கியருளினார்கள். பிறகு மாகேஸ்வரபூஜை நடைபெற்றது. ஏராளமான ஏழைகட்கு அன்னம் வழங்கப்பட்டது. பிராமண போஜனமும் நடைபெற்றது.

மாலை மேணி. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அடியார் களும் அன்பர்களும் புலவர்களும் புடைசூழ, யானை முதலிய சகல விருதுகளும் முன்செல்ல, சிறந்த மேளவாத்தியம் முழங்கக் காவிரித் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளினார்கள். காவிரியின் நீர்ப்பெருக்கு அனைவர்க்குமே ஆனந்தமளித்தது. திருமஞ்சனம் நடைபெற்றது. வரும்வழியிலுள்ள குருமூர்த்தங்களை வழி பட்டுக்கொண்டு ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கா தேவி, ஸ்ரீ ஞானபுரீசுவரர் வழிபாடு முடித்துச் சொக்கலிங்கப் பெருமான் பூசைமடத்திற்கு எழுந்தருளியானார்கள். அங்கு குருஞானசம்பந்தப்பெருமானை ஆவாஹனம்செய்து பூஜையும் சம்பிரதாயப்படி நடத்தினார்கள். அப்பூஜையில் பாவாடை போட்டு நிவேதிக்கப்பெறும் அக்காரஅடிசில் திருமெஞ்ஞானம் எனப் பெயர்பெறும். பூஜைமுடிந்ததும் நிவேதனம் அன்பர் கட்கு வழங்கப்பெறும். இவ்வாறு பூஜைமுடிந்தபிறகு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கொலுவிலமர்ந்து பூசனை ஏற்று அனைவர்க்கும் அருட்பிரசாதம் வழங்கினார்கள்.

மறுநாள் :

முதனாள்போலவே சொக்கலிங்கப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அடுத்து மாகேஸ்வர பூஜையும் அப்படியே. வழக்கம்போல் திருவாவடுதுறை, மதுரை போன்ற ஏனைய மடத்துப் பிரதிநிதிகளும் வந்து கலந்துகொண் டார்கள். காலையில் புலவர் பெருமக்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். சீகாழி தேவஸ்தானம் கட்டளைவிசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர் களும், திருப்பனந்தாள் தேவஸ்தானம் கட்டளைவிசாரணை வித்துவான், ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் சொற்பொழிவில் கலந்துகொண்டு முறையே 'நாம மந்திரம்', 'அருள்நூல்' என்ற தலைப்புக்களில் சொற்பொழி வாற்றினார்கள். ஏழைகளுக்கு அன்றும் அன்னம் அளிக்கப் பட்டது. பிராமணபோஜனமும் நடைபெற்றது. பூரிச்செலவும் புலவர் சன்மானமும் வழங்கப்பட்டன.

மாலை 5மணிக்குத் திரு. T. V. திருவேதி அவர்கள் யோகாசனங்களைச் செய்துகாட்டி, விளக்கமும் சொன்னார்கள். மேணி முதல் தருமபுர ஆதீன இசைப்புலவர், எட்டயபுரம் சமஸ்தான வித்துவான், இசையரசு, தேவாரமணி, திரு. M.M. தண்டபாணி தேசிகர் அவர்களின் இன்னிசையரங்கு நடைபெற்றது. அதற்கு மேல் பட்டிணப்பிரவேசம். அதாவது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சிவிகையில் ஆரோகணித்து, சிறந்த மேளவாத்தியங்களுடனும், யானை குடை கொடி முதலிய சகலவிதமான விருதுகளுடனும் திருவீதியில் பவனிவருதல். இது பார்க்கத்தகுந்த காட்சியாதலின் இந்த ஆண்டு ஏராளமான கூட்டம். பவனி முடிந்து ஆதீன மடாலயத்திற்கு வந்ததும் முதனாள்போலவே முத்துக்களாலும், மலர்களாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பெற்ற விமானத்தில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளியிருந்து காட்சிவழங்கினார்கள். ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பாவனாபிஷேகம் செய்து பூசித்து அருச்சித்து ஆராதனைசெய்தார்கள். பாவலர்கள் பாமாலை சூட்டினார்கள். சீடர்கள் காணிக்கை செலுத்திக் கொண்டார்கள். இவையெல்லாம் முடிந்தபிறகு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அனைவர்க்கும் விபூதிப்பிரசாதம் வழங்கினார்கள். இதுதான் திருக்கொலுக்காட்சி எனப்பெறும்.

6—6—53 சனிக்கிழமையன்று ஆதீனக் குடிமக்கள் அனைவர்க்கும் எண்ணெயும் அரப்பும் கொடுத்து முழுகச்செய்து மடாலய முகப்பில் அன்னம் அளிக்கப்பெற்றது.

தருமபுரத்தில் மஹோற்சவம்

தருமபுர ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி கோயில் மஹோற்சவம் 25—5—53 திங்கட்கிழமை முதல், 3—6—53 புதன்கிழமை முடிய பத்துநாட்களும் மிக விமரிசையாக நடைபெற்றது. உற்சவத்தைச்சார திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடும் சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான அன்பர்கள் வந்து கண்ணால் தரிசித்தும், மனத்தால் தியானித்தும், காதால் கேட்டும் இன்புற்றார்கள். வீதியுலாக் காட்சியில் காலையிலும் இரவிலும் ஆதீன வேதசிவாகமபாடசாலை மாணவர்கள் வேத பாராயணம் நிகழ்த்தினார்கள். ஆதீனத் தேவாரபாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும், ஆதீன தேவஸ்தானத் தேவார வகுப்பு ஆசிரியர்களும் தேவாரபாராயணம் நிகழ்த்தினார்கள்.

குருபூஜைத் திருநாளன்று:

ஆதீனத்தின் நான்காவது மகாசந்நிதானம்,
ஸ்ரீ-ல-ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமிகளின்
குருமூர்த்த ஆலயத்தில் வழிபாடு

352

மாயூரம் தாலுக்கா சேரிகளில்

தருமபுர ஆதீனப் பிரசாரம்

(சென்றமாதத்தொடர்ச்சி)

நாட்டிலே கடவுள்நம்பிக்கையை வளர்க்கப் பலபல திட்டங்களை வகுத்து நாடுகள்தோறும், நகரங்கள்தோறும். ஊர்கள்தோறும், சேரிகள்தோறும், பிரசாரத்தின் மூலம் சமயஉணர்ச்சி உண்டாக்கிவரும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சென்றமாதத்தில் முதல் 13நாட்கள்தொடர்ச்சியாகச் சேரிப்பிரசாரம் செய்துவர ஏற்பாடு செய்திருந்தார்கள். இப் பிரசாரம் தாலுகாவாரியாகப் பணிசெய்ய முற்பட்டுள்ளது. கிராமங்களில் பலர் படிப்பில்லாதவர்கள். அவர்களிடையே பல்வேறு கட்சிகள் சென்று 'குந்தக் குடிசையில்லாமலிருக்கும் குடியானவர்களே! படுக்கப் பாயில்லாமல் தவிக்கும் பாமர மக்களே! உங்கள் நிலைமையை உயர்த்த நாங்கள் பாடுபடுகின்றோம். கொடியைப் பிடியுங்கள்; கோஷம் போடுங்கள்' என்ற ரீதியிலே பேசி அவர்கள் அறிவுநிலையைத் திருத்தி வந்திருக்கிறார்கள். அந்நிலைமாறி, கடவுள்நம்பிக்கையிலே நாம் உயரவேண்டும்; வாய்ஜாலத்தில் ஏமாறக்கூடாது; கடவுளை மறத்தல்கூடாது என்று எடுத்துச்சொல்லி வந்திருக்கிறது இப்பிரசாரவாகனம். அம்முறையில் சென்றமாதம் சேரிகளில் சென்று சொற்பொழிவாற்றியவிபரம் ஞானசம்பந்தத்தின் வாயிலாக அன்பர்கள் அறிந்ததே. அதன் தொடர்ச்சியும் இவ்விதழில் வெளிவருகிறது.

பட்டணத்தெரு மாரியம்மன்கோவில் எதிரில்:- 1—5—53. தரங்கம்பாடி ஆசிரியர் பெண்பயிற்சிக் கல்லூரி உதவித் தலைமை ஆசிரியர், உயர்திரு ரங்கசாமி ஐயர் B. A., L. T., அவர்கள் தலைமையில் சிறந்ததோர் கூட்டம் நடைபெற்றது. தருமபுர ஆதினக்கல்லூரித் தமிழ்த்துறைத்தலைவர் வித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள் கடவுள் நம்பிக்கையைப் பற்றிப் பேசினார்கள்.

வெளிப்பாளேயம் தெருவில்:- 2—5—53 பொறையார் நமசிவாய நாடார் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. வித்துவான் திரு ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் நம்பிக்கையின் உயர்வைப்பற்றிப் பேசினார்கள். வித்துவான் திரு. திருஞானசம்பந்தம், வித்துவான் திரு. திருநாவுக்கரசு, திரு. ரங்கசாமி அய்யர் ஆகியோர்களும் பேசினார்கள்,

மாணிக்கப்பங்கு கடற்கரைவெளியில்:- 3—5—53 திரு ரங்கசாமி அய்யர் அவர்கள் தலைமையில் கூட்டம் நடந்தது. சுற்றுப்புற ஊர்களிலுள்ள மக்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் பேசினார்கள்,

எருக்கட்டாஞ்சேரியில்:- 4—5—53 எருக்கட்டாஞ்சேரி சிவன் கோவில் தேரடியில் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கோயில் எக்ஸியூடிவ் ஆபீஸர் திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் பிரசாரக்குழுவினரை வரவேற்றுப்பேசினார். திரு. நமசிவாய நாடார் அவர்களின் தலைமையில் கூட்டம் தொடங்கப்பெற்றது. வித்துவான் வி. சா. குருசாமி. திரு. ரங்கசாமி அய்யர் முதலியோர் பேசினர்.

அனந்தமங்கலத்தில்:- 5—5—53 அனந்தமங்கலம் பெருமாள் கோயிலுக்கு எதிர்வெளியில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. சுற்றுப்புற ஊரிலுள்ள ஹரிஜனங்கள் முதலியோர் வந்திருந்தனர். திரு. நமசிவாயநாடார் அவர்கள் தலைமையில், திரு. குருசாமி, திரு ரங்கசாமி அய்யரவர்கள் முதலியோர் பேசினர்.

ஒழுமங்கலத்தில்:- 6—6—53 ஒழுமங்கலம் மாரியம்மன் கோயில் எதிரில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது, மதிப்பிற்குரிய உயர்திருவாளர் டி. கே. பழனியப்பன் அவர்கள் (டிஸ்டிரிக் கலெக்டர்) கூட்டத்திற்குப் பிரசன்னமாயிருந்தார். திரு. நமசிவாயநாடார் அவர்கள் தலைமையில் கூட்டம் தொடங்கப்பெற்றது திரு. ரங்கசாமி அய்யரவர்களும் திரு. குருசாமி அவர்களும். சொற்பெருக்காற்றினர். பொதுமக்கள் சுமார் 500 பேருக்குக் குறைவின்றிக் கூடியிருந்து கேட்டனர்.

 354

பொறையாற்றில்:- 7—5—53 பொறையாறு ஸ்ரீ சத்தி விலாஸ் பஸ் ஆபீஸ் எதிரிலுள்ள மைதானத்தில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பெற்றது. அன்று சத்திவிலாஸ் பஸ் புரோப் ரைட்டரான உயர்திருவாளர் G. வீரப்பபிள்ளை அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்கள்.

தருமபுர ஆதினப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான் வி. சா. குருசாமி அவர்கள் தலைவர் அவர்களை வரவேற்றுப் பேசினார். தலைவரின் தலைமையுரைக்குப் பிறகு திரு. நமசிவாய நாடார் அவர்கள், திரு. வித்வான் வி. சா. குருசாமி அவர்கள், திரு. வித்வான், கணபதிப் பிள்ளை அவர்கள், திரு. ரங்கசாமி அய்யர் அவர்கள் முதலியோர் பேசினார். வித்வான் வி. சா. குருசாமி அவர்கள் நன்றிகூறக் கூட்டம் முடிவுற்றது. பொறையார் சுற்றுப்புற ஊர்களிலிருந்து ஏராள மான மக்கள் கூடியிருந்தனர்.

காட்டுச்சேரியில்:- 8—5—53 காட்டுச்சேரி திரௌபதை அம்மன் கோயில் எதிரில் திரு. நமசிவாய நாடார் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது, ஆசிரியர் திரு. நாராயண சாமி அவர்கள், திரு. குருசாமி அவர்கள், திரு. கணபதிப் பிள்ளை அவர்கள் முதலியோர் பேசினர்,

திருக்களாச்சேரியில்:- 9—5—53 திருக்களாச்சேரி பிள்ளை யார்கோயில் எதிரில் திரு. நமசிவாய நாடார் அவர்கள் தலைமை யில் கூட்டம் நடைபெற்றது. வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள், வித்துவான், திரு. கணபதிப் பிள்ளை அவர் கள், திரு. ரங்கசாமி அய்யர் அவர்கள் முதலியோர் பேசினர்.

சாத்தனூரில்:- 10—5—53 சாத்தனூர் சிவன்கோயில் எதிர் வீதியில் சென்னை திரு, தியாகராசன் அவர்கள் தலைமை யில் கூட்டம் நடைபெற்றது. திரு. ரங்கசாமி அய்யர் அவர்கள், திரு, நமசிவாய நாடார் அவர்கள், திரு கணபதியாப் பிள்ளை அவர்கள், திரு. குருசாமி அவர்கள் ஆகியோர் பேசினர்.

மாணிக்கப்பங்கில்:- 11—5—53 மாணிக்கப்பங்கு கடற்கரை வெளியில் பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க மறுமுறை யும் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பெற்றது. துண்டுப் பிரசுரங்கள் வழங்கியும், டாம் டாம் செய்தும் இருந்ததால் ஏராளமான மக்கள் கூட்டமாகக் கூடினர். மாலை 3-மணிக்கே மாணிக்கப்பங்குக்குப் புறப்பட்டது வாகனம். மணல்வெளி

களில் மக்களின் அன்புக்கயிறு வாகனத்தையன்றிப் பிரசார கோஷ்டியினரின் மனத்தைக்கூடப் பிணித்து இழுத்துச் சென்றது. ஆயிரக்கணக்கான ஒருசிறு ஜனசமுத்திரம் ஒருபுறம். மற்ருெருபுறம் தண்ணீர் நிரம்பிய சமுத்திரம். இதனிடையிலே மிதந்தது எங்கள் உள்ளம். மாணிக்கப்பங்கின் நாட்டாண்மை, உயர்திரு. கிருஷ்ணமூர்த்தி செட்டியார் அவர்கள் தலைமைவகித்தார்கள். வித்துவான், ச. தண்டபாணி தேசிகர் அவர்களும், திரு. ரங்கசாமி அய்யர் அவர்களும், திரு. நமசிவாயநாடார் அவர்களும், திரு. கணபதிப் பிள்ளை அவர்களும் எளிய இனிய தமிழிலே பேசி மகிழ்வித்தனர் புகைப்படங்கள் எடுக்கப்பெற்றன.

தில்லையாடியில்:— 12–5–53 தில்லையாடி சிவன் கோயிலுக்கு எதிரில் திரு. விசுவநாதய்யர் தலைமையில் கூட்டம் நடந்தது. உள்ளூர் அன்பர் திரு. சுப்பையன் அவர்கள், வித்வான், வீ. சா. குருசாமி அவர்கள், திரு. நமசிவாயநாடார் அவர்கள், திரு. கணபதிப்பிள்ளை அவர்கள், திரு. நாராயண அய்யர் அவர்கள், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள். திரு. ரங்க சாமி அய்யர் அவர்கள் ஆகியோர் பேசினுர்கள்.

திருவிடைக்கழியில்:— 13–5–53 திருவிடைக்கழி முருகன் கோயில் எதிரில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பெற்றது. அன்று கிருத்திகையாதலின் ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தனர். கோயில் வழிபாடு செய்யப்பெற்றது. பின் உள்ளூர் போஸ்ட் மாஸ்டர் திரு சபாபதி பிள்ளை அவர்கள் தலைமையில் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள், வித்துவான், திரு. குருசாமி அவர்கள், திரு. நமசிவாய நாடார் அவர்கள், திரு. கணபதிப் பிள்ளை அவர்கள், திரு. ரங்கசாமி அய்யர் அவர்கள், திரு. சுப்பையன் அவர்கள் ஆகியோர் பேசினர். இதுவரை பிரசாரக் குழுவினரிடையே சேர்ந்து பணிசெய்த உயர்திரு. ரங்கசாமி அய்யர் அவர்கள் B. A., L. T., அவர்களுக்கும், பொறையார் உயர்திரு. நமசிவாய நாடார் அவர்களுக்கும். திரு. கணபதிப் பிள்ளை அவர்களுக்கும் பிரசாரம் நடைபெறப் பங்குகொண்ட ஏனை அன்பர்களுக்கும் நன்றி தெரிவிக்கப் பட்டது. கோயில் நிர்வாகிகள் நல்லமுறையில் வரவேற்று உபசரித்தனர்.

திருக்கடவூர் தேவஸ்தானத் தேவார வகுப்புக் குழந்தைகளும் ஆசிரியர் சாமிஐயா தேசிகர் அவர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டு இன்னிசைபாடி மகிழ்வித்தனர்.

தருமபுர ஆதீனத்தில் சிவஞானசித்தியார் பாடவகுப்பு



3̶5̶6̶

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன

குருபூஜைவிழாவைச்சார நடைபெற்ற

சிவஞானசித்தியார் பாடவகுப்பு

(5-வது ஆண்டு)

"ஆருறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும்
நீருக முத்திநிலை நிற்போர்க்குப் - பேருகப்
பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதிபோ தும்"

—தருமபுர ஆதீன ஸ்தாபகர்.

"பாதிவிருத்தத்தால் இப்பார்விருத்த மாகவுண்மை
சாதித்தார் பொன்னடியைச் சாருநாள் எந்நாளோ"

—தாயுமானவர்.

நோக்கமும் இன்றியமையாமையும் :

சடங்கு, சாதனம், தத்துவம், அதனைக்கடந்தநிலை என்ற நான்கை அடிப்படையாகக்கொண்டு இயங்குவது சமயநிலை, இவைகளுள் சடங்கு விதிநூல்களால் விளக்கப்படுவது. ஏனைய மூன்றும் தத்துவ சாஸ்திரங்களை அடிப்படையாகக் கொண்டே அன்றாட அனுட்டானத்திற்கு உரியவையாக அமைந்தன. ஆழமான சாஸ்திர அப்பியாசம் இருந்தால் அல்லது சடங்குகளின் இன்றியமையாமை விளங்கா. அதனாலேயே இன்றைய உலகம் சடங்குகளைப் பொருளற்றன வாகப் புகல்கின்றன. அந்தநிலைமாறி, சடங்குகள் யாவும் தத்துவ சாஸ்திர அனுட்டானங்கள் என்பதை அனைவரும் உணரச்செய்வது இன்றியமையாத கடமை. பாடல்களைப் பொருளுணர்ந்து ஓதுங்கால் இருக்கின்ற இன்பம், பொருள் உணரப்படா ஓசையால் உண்டாவதில்லை. அதுபோலவே தான் சமய சாஸ்திரங்களை நன்றாக அறிந்துகொள்ளாத சடங்கின் ஆசாரங்களும். எல்லோரும் சமய நிலைகளின் நால் வகை அடிப்படைகளையும் உணர்ந்து உயர, சமயசாஸ்திரப் பாடவகுப்பு மிகமிக இன்றியமையாதது.

352

சாஸ்திரங்களுள் சைவ சித்தாந்தத்துக்கு உரியன திருவுந்தியார் முதலிய பதினான்கு என்பதனை அனைவரும் அறிவர். அவற்றுள் எளிமையும், இனிமையும், தெளிவும், விரிவும், வாய்ந்தது சிவஞான சித்தியார் ஒன்றே. இந்நூல் கரைகடந்த கல்வி ஞானமும், உபதேசத்தால் விளைந்த அருள் ஞானமும் ஒருங்கு இயைந்த சகலாகம பண்டித அருணந்தி சிவாசாரிய சுவாமிகளால் அருளிச்செய்யப்பெற்றது. அதனைப் பாடமாகப் பயிலும் கடமைப்பாட்டினை இவ்வாதீனம் ஆதி குருமூர்த்திகள் காலந்தொடங்கி நன்கு இயற்றிவருகிறது, '**சிவஞானசித்திநெறி** காட்டும் குயிலாரும் பொழில்தருமை' என்பது ஆதீன குருபரம்பரை ஸ்தோத்திரத்தின் ஒருபகுதி. அங்ஙனம் சித்திநெறிகாட்டும் சீரியதொண்டினை, இப்போது இவ்வாதீனத்தில் 25-வது குருமூர்த்தியாக எழுந்தருளி அருட்செங்கோல் செலுத்துகின்ற **ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்** தாம் ஆட்சியேற்ற நாள்முதல் கோடைக்கால வகுப்பாக நடத்திவருகிறார்கள்.

இந்த ஆண்டில் :

சிவஞானபோதம் பனிரண்டாம் சூத்திரத்தின் இலக்கியமாக விளங்கும் பெரியபுராணத்தை அருளிச்செய்த தெய்வச் சேக்கிழார் பெருமான் திருநாளாகிய 18–5–53 சோமவார தினத்தன்று மாலை ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் சந்நிதியில் வகுப்பு தொடங்கப்பெற்று 29-5-53வரை நடைபெற்றது.

ஆசிரியர்கள் :

செந்தமிழ்நாட்டில் சைவ சித்தாந்த ஞான பானுவாய் விளங்குகிறவர்களும் மகாமகோபாத்தியாயர், சித்தாந்தசரபம் என்ற பட்டங்களைப் பெற்றவர்களுமாகிய, பழனி வேத சிவாகம பாடசாலை ஆசிரியப் பெருந்தகை **காசிவாசி சிவஸ்ரீ ஈசானசிவாசாரியார்** அவர்கள்.

ஒவ்வொருநாளும் காலையில் 9-மணிமுதல் ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர், மதுரகவி, சித்தாந்த ரத்நாகரம், புலவர், திரு. **முத்து சு. மாணிக்கவாசக முதலியார்** அவர்களைக்கொண்டு சிவஞான சித்தியார் சிந்தனைப் பாடவகுப்பு நடத்தப்பெற்றது.

358

நடைமுறை :

வகுப்பு ஒவ்வொருநாளும் மாலை 5-மணிமுதல் 7-வரையில் நடைபெற்றது. பாடம் ஒவ்வொரு திருப்பாடலிலும் உள்ள பொருள் நயம், வரம்பியல், இவைகளை விளக்கும் சொற்பொழிவு முறையில் நடைபெற்றது. பயில்பவர்கள் ஆசிரியரவர்கள் பேச்சில் உள்ள மேற்கோள்கள், தொகைவகை அமைப்பு முறைகள், கருத்து விளங்கக் கையாளப்பெறும் உவமைகள் இவற்றைக் குறிப்பெடுத்துக் கொண்டார்கள்.

இப்பாடத்திற்கு உதவியாக உண்மை உணரக்கூடிய வகையில், அத்வைதம் முதலிய ஏனைய மதங்களைப்பற்றிய அறிஞர் பேச்சுக்களும், இதனைச்சார நடைபெறும் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டில் தொடர்ந்து நடைபெற்றது. வகுப்பில் பயின்ற மாணவர்கட்கு மிகப் பயனளித்தது.

பாடத்திட்டம் :

1. **இறை உண்மை**

   முத்தொழிலுண்மை. சங்காரகருத்தா.

2. **கட்டுண்மை**

   மும்மலம், புநருற்பவம், திரோதானசத்தியின் நிலை.

3. **உயிர் உண்மை**

   ஆன்மாவைப்பற்றிய பிறமதங்களின் கொள்கைகள் சைவசித்தாந்த முடிபு.

4. **உயிரியல்பு**

   ஆன்மாவின் இலக்கணம், பிறமத மறுப்பு.

5. **கட்டியல்பு**

   காட்டும் உபகாரம்

6. **இறை யியல்பு**

   பதியின்பொதுவியல்பு, சத்தின் எதிர் அசத்துமில்லாமை, அசத்து சத்தை அறியமாட்டாமை.

359

7. சதசத்துரிமை

ஆன்மாவிற்குள்ள உரிமை.

8. குருதரிசனம்

தீக்ஷை, வேத சிவாகமச் சிறப்பு, ஞானவழிபாடு, குருபதேசம்.

9. திருவைந்தெழுத்து

அந்தரியாகம், பஞ்சாக்ஷரஜெபம்.

10. சிவபோகம்

ஏகனுகி இறைபணிநிற்றல், பாசநீக்கம்.

11. ஆன்மலாபம்

சிவப்பேறு, ஆன்மாவிற்கு எய்தும் இலாபம்.

12. ஜீவன்முக்தர் நிலை

சிவஞானியரொடு கூடல்; சிவவேடம், சிவாலயதரிசனம்.

பாடவகுப்பில் மேற்கோளாகக் கையாளப்பெற்ற நூல்கள்:-

திருமுறைகள், பௌஷ்கர விருத்தி, மிருகேந்திரவிருத்தி, சிவாக்கிரபாஷ்யம், சிவஞானபோதமாபாஷ்யம், முத்திநிச்சய மாபாஷ்யம், மெய்கண்டநூல்கள்பதினுன்கு, சிவபோகசாரம், சோடசகலாப்பிராசாதஷட்கம். அஷ்டப்பிரகரணம்.

பயன் :

ஆண்டுகள்தோறும் இதில் சேர்ந்து பயில்பவர்கள் ஆசிரியர்களாகவே இருப்பதால் இளைஞர் உள்ளத்து அன்பு நெறி தழைத்தோங்க ஆவனசெய்து வருகின்றுர்கள். கடவுள் பக்தி இருந்தால் அல்லது யாரும் எதிலும் எத்துணையும் கடைத்தேறமுடியாது என்பதனை மாணவர்களுக்கு உணர்த்தி வருகின்றுர்கள்.

தேர்வு :

வகுப்பு முடிந்ததும், பயின்ற ஒவ்வொருவரும் பயின்ற கருத்துக்களை ஒரு கட்டுரையாக எழுதித்தர ஏற்பாடு செய்யப்

பெற்றுள்ளது. அதனைப் படித்துத் தகுதி அறிந்து பட்டங்கள் வழங்கப்பெறும்.

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு 5-ம்திருநாள் விழாவில் தலைமைவகித்த சென்னை அறநிலையப் பாதுகாப்பு மந்திரி, கனம். திரு. K. வேங்கடசாமி நாயுடு அவர்களைக் கொண்டு அனைவருக்கும் தகுதிப் பத்திரங்கள் வழங்கப் பெற்றன,

பயின்றவர்கள் பெயர் விபரம்

தஞ்சை ஜில்லா

1 வித்துவான், ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்,
மௌனமடம் கட்டளை விசாரணை, திருச்சி.

2 வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள்,
கட்டளை விசாரணை, சீகாழி.

3 வித்துவான், ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள்.
கட்டளை விசாரணை, ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானம், திருப்பனந்தாள்.

4 ஸ்ரீமத் சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்,
கட்டளை விசாரணை, திருக்கடவூர்

5 ஸ்ரீ மகாலிங்கப்பரதேசி.
கட்டளை விசாரணை, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம், மாயூரம் குமரக்கட்டளை.

6 வித்துவான், ஸ்ரீ அருள்நந்திசிவாசாரியார்,
தமிழாசிரியர், தஞ்சை போர்டு உயர்நிலைப்பள்ளி, அம்மாப்பேட்டை.

7 திரு. சிவ. சிவராஜப்ப முதலியார், B. A., B. T.
தஞ்சை போர்டு உயர்நிலைப்பள்ளி, திருவாரூர்.

8 சமயத்தொண்டர் திரு. மருள்நீக்கியார்,
திருக்கருகாவூர்.

361

9 திரு. சு. ஏகாம்பரநாதன் B. A.
ஆசிரியர், தஞ்சை மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளி,
மணல்மேடு.

10 வித்துவான், திரு. தி. பிச்சைப் பிள்ளை,
தமிழ் விரிவுரையாளர், அரசினர் கல்லூரி, குடந்தை.

11 வித்துவான், திரு. அ. சு. கோவிந்தராசன்,
தமிழ்விரிவுரையாளர்,
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள்
செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்,

12 வித்துவான், திரு. எ. பரசுராமன்,
ஆசிரியர், நகரஉயர்நிலைப்பள்ளி, கும்பகோணம்.

13 திரு, கே. சுப்பிரமணிய ஐயர், B. A,
ஆசிரியர், சபாநாயக முதலியார் உயர்நிலைப்பள்ளி,
(பத்திரிகா நிருபர்.) சீகாழி.

14 வித்துவான், திரு. வி. சா. குருசாமி,
தமிழ்ப்பேராசிரியர், தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரி,
தருமபுரம்.

15 வித்துவான், திரு. வை. திருஞானசம்பந்தம்,
தமிழாசிரியர், தருமபுர ஆதீன ஓரியண்டல் ஹைஸ்கூல்,
தருமபுரம்.

16 வித்துவான், திரு. M. குஞ்சிதபாதம்,
தமிழாசிரியர், போர்டு ஹைஸ்கூல், நாச்சியார்கோயில்.

17 வித்துவான், திரு. கணபதிப் பிள்ளை,
தமிழாசிரியர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி,
தரங்கம்பாடி.

18 பிரசங்கபூஷணம், திரு. ச. க. தியாகராஜ பிள்ளை,
திருவாரூர்.

19 வித்துவான், திரு. மு. ஆறுமுக தேசிகர்,
தமிழ்ப்பேராசிரியர், தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரி,
தருமபுரம்.

20 வித்துவான், திரு. M. ராஜகோபால பிள்ளை,
தமிழாசிரியர், தஞ்சை போர்டு உயர்நிலைப்பள்ளி,
திருவாரூர்.

21 வித்துவான், திரு. R. ஏகாம்பரநாட்டார்,
வீரராகவ ஹைஸ்கூல், தஞ்சை.

22 சிரோமணி பிர்மஸ்ரீ A. சுந்தரேச சிவாசாரியார்.
மிலட்டூர்.

23 ஸ்ரீ P. பரமேசுவர குருக்கள்,
பூண்டி.

இராமநாதபுரம் ஜில்லா

24 வித்துவான், திரு, V. S. ஆறுமுகம்,
தமிழாசிரியர், திருநாவுக்கரசு வித்தியாசாலை,
நேமத்தான்பட்டி.

25 வித்துவான், திரு. K. குஞ்சிதபாதம்.
தமிழாசிரியர், தண்டாயுதபாணி உயர்நிலைப்பள்ளி,
கண்டரமாணிக்கம்.

26 வித்துவான், திரு. V. S. தண்டபாணி,
தமிழாசிரியர், சிவகாமி அம்பாள் உயர்நிலைப்பள்ளி,
இராங்கியம்.

கோயம்புத்தூர் ஜில்லா

27 வித்துவான், திரு. G. முருகையா பிள்ளை,
தமிழாசிரியர், போர்டு உயர்நிலைப்பள்ளி,
கௌந்தப்பாடி.

28 வித்துவான், திரு. ப. நடராஜன்,
தமிழாசிரியர், மகாஜன உயர்நிலைப்பள்ளி, ஈரோடு.

29 திரு. நா. இராமலிங்கம்,
16, செங்குந்தர் வீதி, ஈரோடு.

30 திரு. M. பெரியசாமி,
சுப்பராயம்பாளையம், ஈரோடு.

363

சென்னை

31 வித்துவான், திரு. K. தியாகராசன்,
தமிழாசிரியர், Sir. M. Ct. முத்தையா செட்டியார் உயர்நிலைப்பள்ளி, புரசவாக்கம், சென்னை.

32 புலவர் திரு. S, சீனுவாசன்
தமிழாசிரியர், ஸ்ரீ முத்தியாலுப்பேட்டை, ஹைஸ்கூல், சென்னை.

திருநெல்வேலி ஜில்லா

33 வித்துவான், திரு. வே. சங்கரநாராயண பிள்ளை,
தமிழாசிரியர், ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, ஸ்ரீவைகுண்டம்.

34 வித்துவான், திரு. அ, சங்கரலிங்கம் பிள்ளை.
தமிழாசிரியர், நெல்லை நகரமன்ற உயர்நிலைப்பள்ளி, பேட்டை, திருநெல்வேலி.

வடஆற்காடு ஜில்லா

35 வித்துவான், திரு. T. S, தேவசேனுபதி தேசிகர்,
ஸ்ரீ வேங்கடேஸ்வர உயர்நிலைப்பள்ளி, வேலூர்.

தென்னுற்காடு ஜில்லா

36 வித்துவான், திரு. க. பா. வேல்முருகன்,
முதன்மைத் தமிழாசிரியர், கழகஉயர்நிலைப் பெண்பள்ளி, விழுப்புரம்.

37 வித்துவான், திரு. ச. கணபதி,
தமிழாசிரியர், போர்டு உயர்நிலைப்பள்ளி, வந்தவாசி.

38 வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணியன்,
தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, சிதம்பரம்.

39 வித்துவான், திரு. K. அரங்கநாதம் பிள்ளை. B.A.,L.T.
ஆசிரியர், போர்டு உயர்நிலைப்பள்ளி, காட்டுமன்னார்கோயில்.

கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(விஜய-ஷூ ஆனி-மீ 1-உ முதல் 31-உ முடிய)
(15—6—53 முதல் 15—7—53 முடிய)

1. மேஷம், அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

மேஷராசி 9 பாதத்துக்கும் மாதம் 15உ முடிய சுபபலனைத் தரும். தூரயாத்திரை, உத்தியோகலாபம், மேலோர் பெரியோர் நேசம், தெய்வபலம், சன்மார்க்கப்பிரவிருத்தி, ஆரோக்கியம், மனோஉல்லாசம், இல்லறசுகம், சுபசோபனாதிகள், பந்துமித்திராளுடைய சேர்க்கை இவைகளும், பிற்பாதியில் பரணி நக்ஷத்திரம் தவிர மற்ற இரு நக்ஷத்திரத்துக்கும் மிசிரபலனும், பரணிக்கு மிகுந்த கஷ்டமான பலனும் நடைபெறும். சுக்கிர வாரம் சுபமாகும்.

2. விருஷபம், கார்த்திகை, ¾ ரோஹிணி, மிருகசீரிஷம். ½

விருஷபராசிக்காரர்கள் இந்தமாதம் மிகுந்த சிரமப்படுவார்கள். அதிகச் செலவுகள், வியாதி பயம், இடம் மாறல், உத்யோகத்தில் உபத்திரவம், விவசாயிகளின் தொல்லை, துஷ்ட சஹவாசம், விரோதங்கள், அபஜயம், காரியவிக்னம் இவைகள் ஏற்படும். மாதக்கடைசியில் சிலநாள் சுபசமாசாரக்கேள்வியும் நஷ்டதனமும் கிடைக்கும். சனி புதன் சுபவாரமாகும்.

3. மிதுனம், மிருகசீரிஷம், ½ திருவாதிரை, புனர்பூசம். ¾

புனர்பூசத்துக்கு அதிகச் செலவின்பேரில் சந்தோஷமுண்டாகும். சுபசோபனாதிகளும் குடும்பத்தொல்லையும் ஏற்படும். மாதக்கடைசியில் சில எதிர்பாராதபடி கஷ்டங்கள் சம்பவிக்கும். மற்ற இரு நக்ஷத்திரபலனும், கவலையோடும் கடன் விருத்தியோடும் காலம்கழியும். புத்திராதிகளாலும். சிநேகிதர்களாலும் கஷ்ட நஷ்டங்கள் சம்பவிக்கும், நாஸ்திகம் ஓங்கும். சதா வரகைஷயாகவே இருக்கும். நிறைய பொய் வார்த்தைகள் உபயோகப்படும். சனி நலன்காட்டும்.

3643

4. **கடகம்,** புனர்பூசம், $\frac{1}{4}$ பூசம், ஆயில்யம்.

பூசத்துக்கு எல்லாம் ஜயமாகக்காட்டிப் படுகுழியில் விழும் சந்தர்ப்பம் ஏற்படும். நாஸ்திகர்கள் சேர்க்கையும் பெரியோர் சாபமும் கிட்டும். மற்ற இரு நக்ஷத்திரபலனும், விசேஷ நன்மைதரும். தனலாபம், வியாபார விருத்தி, அசாத்திய சாதனம், கடன் நிவர்த்தி, பெரியோர் அன்பு, தெய்வபலம் ஓங்குதல், உத்தியோக லாபம், விவசாயவிருத்தி, காலிகன்று சேர்க்கை, வாஹனப்பிராப்தி, நூதன வஸ்திராபரணச் சேர்க்கை, தொழில் மேன்மை எல்லாம் சுலப சாத்தியமாகும். புதன் வியாழன் சுபம்தரும்.

5. **ஸிம்மம்,** மகம், பூரம், உத்திரம். $\frac{1}{4}$

சிம்மராசி பலன் பூராவும் சுபத்தையே தரும். மங்கள காரியங்கள், தூரப்பிரயாணம், வியாதிசாந்தி, விவஹாரஜயம், கீர்த்திபத்திரம், இல்லறசுகம், தெய்வபக்தி, வியாபாரபெருக்கம், பெரியோர் நேசம், வாஹனச் சேர்க்கை, விஜயம், சந்தோஷம், தனலாபம் எல்லாம் தரும். செய்வாய் புதன் மங்களமாகும்.

6. **கன்னி,** உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை. $\frac{1}{2}$

க்ன்னிராசி பலன் பூரா எல்லோருக்கும் சுபத்தையேதரும். தெய்வசக்தி ஓங்கும், வெகுநாளாக எதிர்பார்த்த காரியங்கள் சுலப சாத்தியமாகும், தேவாலயப் பிரதிஷ்டா பலன்களும், ராஜாங்க மதிப்பும், எங்கும் நிறைந்த கீர்த்தியும், தன்னிடம் துவேஷமுள்ள சமான பிரபுக்களின் தோல்வியும், நஷ்டதன பிராப்தியும், சிவகேசவ பக்தியும், ஸதா தெய்வசிந்தனையும், தெய்வபலமுள்ள உபாசகர்களின் சேர்க்கையால் அசாத்திய சாதனமும் ஏற்படும். ஹஸ்த நக்ஷத்திரக்காரர்களுக்கு மத்தியில் பத்துதினங்களில் குடும்பத்தொல்லையும், வியாதிபயமும் அதிகச் செலவும் நஷ்டமும் காட்டும். வெள்ளிக்கிழமை சுபம்தரும்.

7. **துலாம்,** சித்திரை, $\frac{1}{2}$ சுவாதி, விசாகம். $\frac{3}{4}$

சித்திரையும் சுவாதியும் சுபத்தையே தரும். தேவதா குரு பக்தியும், தெய்வபலம் பிரகாசித்தலும், நிதிதனபிராப்தியும், எதிர்பாராதபடி சதா தனவரத்தும், தொழில் விருத்தியும்,

366

கீர்த்திபத்திரமும், கடன்நிவர்த்தியும், வரக்கூடாதவர்களும் காணக்கிடைக்காதவர்களுமான பெரியோர்கள் வரத்தும், நினைத்ததெல்லாம் கைகூடுதலும், சத்துருக்கள் நாசமும், சஜ்ஜன சேர்க்கையும் உண்டுபண்ணும். விசாக சம்பந்தமான பலன் நேர் விபரீதத்தையே விளைவிக்கும். ரொம்ப ஜாக்கிரதையாய் இருந்தாலொழிய நன்மை கிட்டாது. பொதுவாகத் துலா ராசிக்காரர்களுக்குப் புதவாரம் சுபமாகும்.

8. **விருச்சிகம்**, விசாகம், $\frac{1}{4}$ அனுஷம், கேட்டை.

விருச்சிக ராசிபலன் சென்றமாதம்போலவே இருக்கும். சுகதுக்கம் சமன், லாபநஷ்டம் சமன், ஜயாபஜயம் சமன், புத்தி சதா சஞ்சலம், எதிலும் சந்தேஹம் ஏற்படல், ஒரு காரியமும் நடைபெறுமல் தடங்கல் ஏற்படல் முதலிய பலன்களே நடைபெறும். தெய்வத்தை நம்பினால் மனம் சாந்தியடையும். புதன் வெள்ளி சுபமாகும்.

9. **தனுசு**, மூலம், பூராடம், உத்திராடம். $\frac{1}{4}$

தனுராசிபலன் பூராவுமே சுபமாகும். உத்யோக லாபம், கிருஷிகாரியவிருத்தி, நஷ்டதனபிராப்தி, ஆரோக்கியம், விவசாய விருத்தி, சேவக ஜனச்சேர்க்கை, நூதன வஸ்திராபரணச் சேர்க்கை, விவஹாரவெற்றி, சத்துருக்கள் சரணடைதல், காரியானுகூலம், இல்லறசுகம், உபகாரசிந்தை முதலிய ஸத்பலன்கள் ஏற்படும். மாதக்கடைசியில் அதிகச்செலவும் வியாதி பயமும் காட்டும். புதன் வியாழன் சுபம் தரும்.

10. **மகரம்.** உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$.

திருவோணமும் அவிட்டமும் சுபபலன் தரும். உத்யோக லாபம் கிடைக்கும், நஷ்டதனம் சேரும், கடன் தொலையும், வியாதி சாந்தியாகும், பெரியோர் அன்புகிட்டும், தெய்வபலம் ஓங்கும், தொழில் விருத்தியாகும், தூரத்திலிருந்து சந்தோஷ சமாசாரம் கிடைக்கும், இல்லறசுகம் பெருகும், அடிக்கடி சஞ்சாரபலன் இட்டும். உத்திராடம் சம்பந்தப்பட்ட பலன் மிகுந்த சிரமத்தை உண்டுபண்ணி, நலன்காட்டும். சதா மனம் ஒருநிலையில் நிற்காமல் யோசனையிலேயே காலம் ஓடும். வியாழன் வெள்ளி சுபம் தரும்.

36

11. கும்பம். அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾.

அவிட்டத்துக்குச் சிரமத்தின்பேரில் சுகசௌக்கியங்களும், வியாதி சாந்தியும், வம்சவிருத்தியும், தொழில் மேன்மையும், இல்லறசுகமும் ஏற்படும். பூரட்டாதிக்குச் சென்றமாதம் போலவே சந்தோஷகரமான பலன்கள் கிடைக்கும். மாதக் கடைசியில் சஞ்சாரபலன் ஏற்படும். இல்லறம் ஓங்கும். கிரஹ சுகமும், தனதான்ய சமிருத்தியும், சதா பந்துமித்திர சேர்க்கையும், சுபசந்தோஷமும் உண்டாகும். புதன் வியாழன் வெள்ளி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி.

சென்றமாதம்போலவே இந்தமாதமும் மீனராசி பலன் நடக்கும். விசேஷமாகச் சிநேஹிதர்மூலமும் பந்துக்கள்மூலமும் எதிர்பாராத நன்மைகள் கிடைக்கும். மனம் நல்வழியில் பிரவர்த்திக்கும். உத்திரட்டாதிக்குச் சிலர் துர்ப்போதனையால் மனம் மாறும். ஆனால் அதனால் ஒன்றும் நடைபெறாது. துஷ்டர்கள் சேர்க்கையால் வீண்காலம் கழியும், இல்லறசுகம் குறையாது. புதன் வியாழன் சுபவாரமாகும்.

குறிப்பு :- விவசாயிகளாக ஜீவிப்பவர்களுக்கு இயற்கை சாதனங்கள் இம்மாதம்முதல் சரியாக இருக்காதாகையால் நாஸ்திகத்தைவிட்டுக் கடவுளை நம்பி நடத்தவேண்டும்.

தருமபுர ஆதீன வெளியீடுகள் :

1. **திருநீறு.** 3. **ஐந்தெழுத்து.**
2. **உருத்திராக்கம்.** 4. **சோமவாரம்.**

இந்த நான்கினையும்பற்றித் தனித் தனியான விளக்கங்கள் அந்தந்த வெளியீட்டிலும் தரப்பட்டுள்ளன. நூல், வடிவில் சிறிதாயினும், உணர்த்தும் பொருள்வகையில் பெருமையுடையது. மிக எளிய இனியநடையில் எழுதப்பெற்றுள்ளது. ஆங்காங்கு மேற்கோள்களும் வேண்டிய அளவு கொடுக்கப்பட்டுள்ளன. இப்போது இந்நான்கு வெளியீடுகளும் மூன்றாம் பதிப்பாக, ஆதீனத்துக்குச் சொந்தமான ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தான வெளியீடாக வெளிவந்துள்ளன. இந்நான்கும் வேண்டுவோர் மேற்படி தேவஸ்தானத்திற்கு 3 அணா தபாற்றலை அனுப்பிப் பெறுக.

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக சுவாமிகள் குருபூஜை

தருமபுர ஆதீனத்தில் 24-வது ஞானபீடாதிபதியாய் எழுந்தருளி அறப்பணிகள் பல ஆற்றிய ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் எட்டாவது ஆண்டு குருபூஜைப் பெருவிழா 22—5—53 வெள்ளிக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவர்கள் குருமூர்த்த ஆலயத்திற்குமுன் பெரிய கொட்டகை அமைத்து மகரதோரணங்களால் அலங்காரஞ்செய்யப்பெற்றிருந்தது. முதல்நாளே சைவசமயப் பிரசங்கங்கள் தொடர்ந்து நடைபெற்றன. சித்தியார் பாடவகுப்பும் அன்று அங்கு நடைபெற்றது. குருபூஜையன்று காலை இக்குருமூர்த்தத்திற்கும், இதன் அருகில் வடபாலுள்ள 2-வது, 19-வது மகாசந்நிதானங்களின் குருமூர்த்தங்களுக்கும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனை நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களும் எழுந்தருளியாகி வழிபாடு முடித்து அனைவர்க்கும் அருட்பிரசாதங்கள் வழங்கினார்கள். பிறகு 12 மணி வரையில் சொற்பொழிவுகளும், சித்தியார் சிந்தனை பாடவகுப்பும் நடைபெற்றன. இவையெல்லாம் முடிந்தபிறகு மாகேஸ்வரபூஜையும் நடந்தேறியது. ஏழைகட்கும் அன்னமளிக்கப்பெற்றது.

மாலைநிகழ்ச்சி 5-30க்கு: கடவுள் வாழ்த்துடன் கூட்டம் தொடங்கியது. காசிவாசி சிவஸ்ரீ ஈசானசிவாசாரியார் அவர்கள் சிவஞான சித்தியார் பாடவகுப்பைத் தொடர்ந்து நடத்தினார்கள். இத்தகைய நிகழ்ச்சிகள் தெளிவு குருவின் திருமேனி காண்டல் – திருநாமம் செப்பல் – திருவார்த்தை கேட்டல் – குருவுரு சிந்தித்தல் என்ற முறையில் அமைந்திருந்ததை அனைவரும் பாராட்டினார்கள். 7 மணிமுதல் 'ஏழிசைச் செல்வன்' திரு. M. K. தியாகராஜ பாகவதர் & பார்ட்டியின் இன்னிசைப் பிரவாகம் எல்லோரையும் ஆனந்தவெள்ளத்தில் திளைக்கச்செய்தது. மணியும் 10 ஆயிற்று. குருமூர்த்த வழிபாட்டிற்குரிய நேரம். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருமஞ்சனதிகளை முடித்து அடியார்கள் புடைசூழ தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள். அன்பர்கள் திரளாகக் கூடியிருந்தார்கள். ஆராதனைகள் முறைப்படி நடைபெற்றன. அனைவரும் குருவழிபாடாற்றி அருட்பிரஸாதம் பெற்றுக்கொண்டார்கள். விழாமலராக அச்சிட்ட சித்தாந்தசைவ வினாவிடை என்ற வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது. அன்று மாலை திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஜூனியர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் விஜயமாகி குருமூர்த்த வழிபாடாற்றினார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களையும் தரிசித்து ஸ்ரீ ஞானபுரீசுவரர் வழிபாட்டினையும் முடித்துக்கொண்டார்கள்.

விழாவில் நிகழ்ந்த சொற்பொழிவுகள் :— திருவாரூர் இராஜாங்கக்கட்டளை கட்டளைவிசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "ஞானத்தமிழ்", சீகாழி தேவஸ்தானம் கட்டளைவிசாரணை வித்துவான் ஸ்ரீமத் ராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "வேந்தர்தமிழ்", திருப்பனந்தாள் தேவஸ்தானம் கட்டளைவிசாரணை வித்துவான் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "தோழர்தமிழ்", திருச்சி மௌன மடம் கட்டளைவிசாரணை வித்துவான் ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "மணித்தமிழ்", திருக்கடவூர் தேவஸ்தானம் கட்டளைவிசாரணை ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "தேவர்தமிழ்", தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் "மூலர்தமிழ்", தருமபுர ஆதீனக் கல்லூரி வித்துவான் வகுப்பு மாணவர் திரு. சொ. சிங்காரவேலன் "பிரபந்தத்தமிழ்", தருமபுர ஆதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் "புராணத்தமிழ்".

திருக்கருகாவூரில்

நூல்நிலையக் கட்டிடத் திறப்பு விழா

திருக்கருகாவூரில் தருமபுர ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருப் பெயரால் நிறுவப்பெற்ற நூல்நிலையக் கட்டிடத்தைக் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 15—5—53 அன்று திறந்துவைத் தருளினார்கள். கிராமவாசிகள்சார்பில் பாபநாசம்தாலூகா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. டி. வி. சேஷையர் அவர்கள் தலைவருக்கு வரவேற்பு இதழை வாசித்தளித்தார்.

நூல்நிலையத்தைத் திறந்துவைத்துப்பேசிய அடிகளார், தமிழ் நாட்டுச் சைவ மடங்களில் சிறந்த தருமையாதீனத் தலைவர் பெயரில் இந்நூல் நிலையம் தொடங்கியிருப்பது வரவேற்பதற்குரியதென்றும், இது வளம்பெற வளர்ந்து மக்களுக்குப் பயன்பெறவேண்டும் என்றும் கூறினார்கள். பின்னர், திரு. மருள்நீக்கியார் அவர்கள் நன்றிகூற விழா முடிவுற்றது. திருக்கருகாவூர்த் தொண்டர் மருள்நீக்கியார் அவர்கள் தமது சொந்தச் செலவிலேயே இக்கட்டிடத்தைக் கட்டிப் பொதுமக்களுக்குப்பயன்படும்படி அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

Prntied & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9—6—1953.